# உறவுகள்
Uravukal

ஆடி ஆவணி புரட்டாதி 2023

ஆண்டவர்
இரக்கமும் அருளும் கொண்டவர்.
தி:பா:103

Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இதழ் 87



பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் பாலாண்டுப் பத்திரிகை

# உறவுகள்
Uravukal

**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: சில்வெஸ்ரர் தம்பிராசா - மறையாசிரியர்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி: தயாளினி வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: லூாசியா மேரி
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**மறையாசிரியர்:** திரு: ரி. எம். சந்தியாகு



**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France

**Tel:** 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org



**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரான்ஸ்

No 87

2022

**சந்தா விபரம்**
தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

**கணினி வடிவமைப்பு:** றெஜீனா சிவகுமாரன்
www.uravukal.org
இணையதள பதிப்பாசிரியர்


## ஆசிரியர் எண்ணம்

கனி கொடுக்கும் வாழ்வு"

--------------------------------

இந்த உலகத்தில் நாம் பெற்றுள்ள மிகப் பெறுமதியான இலவசமான கொடை எதுவென்றால், அது வாழ்வு என்ற பெருங்கொடை.

இந்த வாழ்வு பிறப்பு, இறப்பு என்ற இரு துருவங்களுக் கிடையே வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அழகாக வடிவமைக்கப்பட்டுள்ள வாழ்வை, எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதல்ல, மாறாக எப்படி வாழ்ந்தோம் என்பதிலே சிறப்பு பெறுகின்றது. எனவே ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம் என்ற வாழ்வு கிறிஸ்தவத்துக்கு பொருந்தாத வாழ்வாகும். ஆதலால் நமது வாழ்வை அர்த்தமுள்ளதாக பயன்கொடுப்பதாக வாழ்ந்து இந்த வாழ்வைக் கொடுத்த தந்தையை மாட்சிப்படுத்த அழைக்கப் படுகின்றோம்.

**நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது** (யோவா 15:8)

கனி கொடுக்கிற வாழ்வு என்பது எது? எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுத்து கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி எனது சொந்த முயற்சியோடு இறைவனின் துணை கொண்டு எனக்கும் அடுத்தவருக்கும் நன்மை செய்வது.

தீமைகள் மலிந்த ஒரு உலகத்திலே வாழுகின்றோம். தீமை செய்வதற்கான வாய்ப்புக்களும், அதை உற்சாகப்படுத்துகின்ற மனிதர்களும் ஏராளம். அதனால் தீமையைச் சார்வது இயல்பாகிவிடடது. மாறாக நன்மை செய்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தாலும், சந்தர்ப்ப சூழ்நிலைகளும் அதை உற்சாகப்படுத்தும் மனிதர்களும் குறைவாக இருப்பதால் அதை செய்வதற்கான தைரியம் நம்மிடம் காணாமல் போய் விடுகின்றது

போராட்டம். இது நம் ஒவ்வொருவருக்கும் மிகவும் பொருந்தும். நன்மையும் தீமையும் இந்த உலகத்திலே ஒரு சேர காணப்படுகின்றது. இது நமது சொந்த பிரச்சினை அல்ல. இதிலே நான் எதை தெரிவு செய்கிறேன் என்பதுதான் எனது தனிப்பட்ட பிரச்சனையாகும்.

போலிகளும், கவர்ச்சிகளும் நிறைந்த உலகத்திலே பயணிக்கிறோம். இதில் நமக்குத் தேவைப்படுவது நன்மை தீமையை பகுத்தாய்ந்து நல்லவற்றை செயற்படுத்துவதற்குரிய ஞானமென்ற ஆவியின் கொடையாகும். உலகத்தோடு ஒத்து ஓட வேண்டும் என்ற நியதி இருந்தாலும், கடவுளின் அன்பு மகனாக, மகளாக உலகத்தின் நீரோட்டத்திற்கு எதிர்நீச்சல் போடுகின்ற சீடத்துவ வாழ்வு வாழ முயற்சி செய்வோம். பெற்ற பெரு வாழ்வை சிறப்போடு வாழ்ந்து நற்கனி கொடுப்போம். இறையாசீர் உங்களை திடப்படுத்துவதாக, அன்னை மரியாவின் பரிந்துரை உங்களை வழிநடத்துவதாக.

**உறவில் நிலைக்கும்,**

**அருள்பணி: போல் மத்தியு மதன்ராஜ் அ.ம.தி.**

# அஞ்சாதே நான் என்றும் உன்னோடு



.....ஒருமனிதன் முழுமையாக வாழ பல்வேறுபட்ட துன்ப துயரங்களையும் சவால்களையும் எதிர் கொள்ள வேண்டும் என்பது நியதி.

தாயின் கருவில் இருந்துவெளிவரும் ஒரு குழந்தை வெளி உலகைப் பார்த்து பயப்பிடுகிறது. அஞ்சாதே என்கின்றாள ் தாய். படிப்படியாக குழந்தை வளரும் போது சமுதாயத்தை பார்த்துப் பயப்பிடுகின்றது. அஞ்சாதே என்கின்றார் தந்தை.

சமுதாயத்தில் தானும் ஒருவனாகவளர ஆரம்பிக்கும் போது அந்தகாரசக்திகளின் ஆதிக்கத்தினால் எழும் அசம்பாவித ங்கள் அடக்குமுறைகள் வன்முறைகள் ஒருபுறமிருக்க, மனதில் குறை இருந்தால் மனநோயாளி என்றும், உடலில் குறை இருந்தால் ஊனம் உற்றவர் என்றும் புறம்தள்ளும் இந்தப் பொல்லாத உலகத்தில் மனநிறைவுடன் நின்மதியாக வாழ்வது எப்படிச் சாத்தியம் ஆகும்? உலகில் துன்பதுயரம் இல்லாத மனிதர்களே இல்லையா? என்று மனம் அங்கலாக்கும்போது தான் மகனே! மகளே! நான் என்றும் உன்னோடு இருக்கின்றேன் என்கின்றார் ஆண்டவர்!

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் பலவித துன்ப துயரங்களையும் சவால்களையும் எதிர் கொள்ளவேண்டும் என்பது இயல்பாக இருந்தபோதிலும் நாம் எப்பேர்ப்பட்ட மன நிலையுடன் இவற்றை எதிர்கொள்ளுகின்றோம் என்பதுதான் கேள்வி! இவற்றை எவ்வாறு எதிர்கொண்டு வெற்றிபெறுவது என்று தெரியாது தடுமாறித் தரையில் வீழ்ந்து விடுகின்றோம்.

இந்தப்பொல்லாத உலகில் வாழ்ந்ததே போதும் என்று தாங்களாகவே பலர் தப்பான முடிவுக்கும் வந்து விடுகின்றார்கள் என்பது நாம் அறியாதது இல்லை. இவற்றிற்க்கும் மேலாக! இதுதான் என் தலைஎழுத்து, விதி, இதுதான் என் வாழ்வு! என்று வேண்டாவெறுப்புடன் வாழ்க்கையை நகர்த்த ஆரம்பிக்கின்றோம் இந்நிலையில்தான்! எமக்குள்இருந்த மனநிறைவும், சந்தோஷமும் நம்பிக்கை, விசுவாசம் யாவுமே எம்மை விட்டு நகர்கின்றது. எமக்குள் இருந்த நற்குணங்கள் மறையும்போது ஏனோ! தானோ ! என்று அடுத்தவர்களின் குறைகளை உற்று நோக்கி தேவையற்ற அனைத்துக் காரியங்களுக்கும் முன் உரிமை கொடுத்து எம்மை அறியாமலேயே எம் வாழ்வைத் தொலைத்து விடுகின்றோம்.

இவற்றை விடுத்து வருவது வரட்டும் நடப்பவை நடக்கட்டும் பாக்கலாம் என்ற மனத்துணிவும் தைரியமும் திடமான நம்பிக்கை விசுவாசமும் எமக்குள் கிருபை செய்ய இடமளிக்க வேண்டும். இவற்றைத் தான் எரேமியா இறைவாக்கினர் கைக்கொண்டார்.

அனைத்துச் சவால்களையும் எதிர்கொள்ளும் ஆற்றலும் நம்பிக்கையும் துணிவும் இவரிடம் நிறையவே இருந்தது. இவ்வழியை தன் வாழ்விலும் பின்பற்றினார். பல்வேறுபட்ட துன்பதுயரங்களை அவர் அனுபவித்தபோதெல்லாம் ஒவ்வொரு நிமிடமும், இயேசு தன்னுடனேயே, இருந்து செயல்பட்டதை உணந்தார்.

ஆண்டவர் வலிமை வாய்ந்த போர்வீரராக என்னுடன் செயல்ப்படுகின்றார் என்று உறுதியாகக் கூறுகின்றார்,

எம் வாழ்வையும் வளமாக்கி என்றும் நிறைவுடன் வாழ இவர் வழியை பின்பற்ற முயல்வோம், கிறிஸ்தவ வேதகலாபனைக் காலத்தில் பெரிய கிறிஸ்தோப்பர் என்னும் புனிதரை உரோமைய ஆளுனன் சிறையில் அடைத்தான்.

இயேசுக்கிறிஸ்துவை மறுதலிக்கும்படி அவரை வற்புறுத்தினான். அவர் மறுக்கவே இவரை எப்படிப் பயமுறுத்தி தன் வேண்டுகோளுக்கு இணங்க வைப்பது என்று தன் அமைச்சர்களிடம் ஆலோசனை கேட்டான்.

இவரை இருண்ட பாதாளத்தில் தள்ளிவிட்டுப் பயமுறுத்தினால்,,,,பணிவானா? என்றும் கேட்டான். இல்லை, இல்லை, இவனை அவ்வாறு செய்தால்,. இறை இரக்கத்தை நேரடியாகப் பெறும் வாய்ப்பை நாமே இவனுக்குக் கொடுத்தது போலாகிவிடும் இவனும் மிக்க மகிழ்ச்சியுடன் அங்கு வாழ்வான் என்றான் ஒரு அமைச்சன். சரி,,,,,,,இவரைத் தூக்கிலிட்டுப் பயமுறுத்தினால் பணிய வைக்க முடியுமா? என்றான் இன்னொரு அமைச்சன். இதை அவன் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுவான் ஏனெனில் இறப்பில்தான் இறைவனுடன் ஒன்றித்துத் தேவமகிமையில் மகிழ்வாக வாழமுடியும் என்கின்றார்களே என்றான் இன்னொரு அமைச்சன். ஆளுனனுக்கு ஒன்றும் புரியவில்லை

சரி இவனை எவ்வாறு பணியவைத்து எம் வேண்டு கோளுக்கு இணங்க வைப்பது என்பதை யாருமே சொல்லவில்லையே என்று சினம் கொண்டவேளை, ஒரு அமைச்சன் எழுந்து தன் ஆலோசனையைக் கூறினான். இவன் பாவம் செய்வதுக்குத் தான் பயப்பிடுவான் எனவே,,,,,பாவம் செய்ய இவனைத் தூண்டிப் பணிய வைக்க முடியும் அது ஒன்றுதான் ஒரேவழி என்றான்.

வாழ்வில் வரும் துன்ப துயரங்களைக் கண்டு பயப்படாது பாவத்திற்கு மட்டுமே பயந்து வாழக்கூடிய வாழ்வையும், ஒரு மனப்பக்குவத்தையும் நாம் ஒவ்வொருவரும் பெற்றிருத்தல் மிக மிக அவசியம். துன்பம் ஒரு வழியில் நம்மைத் தாக்கலாம். துயரம் ஒரு வழியில் நம்மைத் துரத்தலாம். ஆனால் "அஞ்சாதே" என்ற இறைவனின் வார்த்தை பல வழிகளில் நம்மைக் காப்பாற்றும். இந்த ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையை இறைவன் மீது நாம் வைப்போம். "உங்கள் கவலையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள் ஏனெனில் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்." நமது கவலைகளை, சிலுவைகளை இறைவனிடம் ஒப்படைப்போம். இறைவன் **அஞ்சாதே நான் என்றும் உன்னோடு** என்று கூறி துன்ப துயர வேளையில் நம்மோடு இருந்து வழிகாட்டுவார்.

**அம்புறோஸ் பீற்றர் - மறையாசிரியர்**



# கொலு வைப்போம் நம் வீட்டில் கோமகனின் சிலுவைதனை

வாருங்கள் என் வீட்டில் வைத்திருக்கும்
சிலுவை தனை வாங்குங்கள்
ஐயோ என் வாழ்வெல்லாம் துயர் இதனால்
பாருங்கள் என் குடும்பம் படுகின்ற
துன்பங்களை !
பாசமுடன் வைத்திருந்தேன் பல குறைகள் வந்தனவே!
சேருங்கள் இதனை நீங்கள் சீக்கிரமாய் சேற்றினிலே!
செபிக்கின்றேன் உங்களிடம் செவிசாய்ப்பீர் நீர் எனக்கு
போருக்குப் பஞ்சமில்லை பொழுதெல்லாம் அமைதியில்லை
பொறுப்போடு இதையெடுத்து பொதுவிடத்தில் போட்டிடுங்கள்!

இப்படிப் புலம்புகின்ற எத்தனையோ குடும்பங்கள்
இருக்கின்றன இவ்வுலகில் இதுவொன்றும் மிகையில்லை!
தம்படி நலம் கூட தரணியில் செய்யாதோர்
தவிப்புடன் கூறுகின்ற தவறிதனைக் கேட்டிடுங்கள்.
எப்படிப் பார்த்தாலும் இறைமகன் பாடுபட்ட
இச் சிலுவை நமக்கென்றும் எள்ளளவும் பாரமில்லை
செப்படி வித்தைகளைச் சிந்திக்காமல் செய்பவர்கள்
செப்பாடும் கூக்குரலை செகத்தாரே கேட்காதீர்

திருச்சிலுவைத் திருநாளை திரு அவை நமக்காக
தேற்றிடும் கருவியென திருத்தூதின் அருவியென
திருத்தாயின் பிறப்பு வந்து திரும்பி வரும் பாரந்தன்னில்
திண்ணமாய் தருகிறது. தீவிரமாய் சிந்திப்போம்!
பெருந்துன்பம் வந்தாலும் பேரிடியே நின்றாலும்
பெயர் சொல்லிப்புனிதர்கள் பேரின்பம் கண்டார்கள்
வரும் நாளில் நாமெல்லாம் வணங்கியதை வாங்கிடுவோம்
வாழ்வென்றும் ஒளியாக வளரும் இதை நம்பிடுவோம்

சாட்சியங்கள் நம்மறைக்குச் சத்தியமாய் தேவையன்றோ
சாதுரிய வாழ்வினுக்கு சம்பாதிப்போம் சிலுவைகளை
மாட்சியிதில் காண நம்மை மன்னரேசு அழைக்கின்றார்
மண்டியிட்டு சிலுவைகளை மதிப்போடு வழிபடுவோம்
ஆட்சி நம் பக்கமென ஆண்டவர் உரைக்கின்றார்
அணுவேனும் துன்பங்கள் அண்டாமல் காத்திடுவார்
காட்சியில் எப்போது கற்சிலுவை கண்டாலும்
கையெடுத்துக்கும்பிடுவோம் கடைசி வரை குணமடைவோம்

சிலுவை என் பெருமையென சிறப்பாகப் பவுலுரைத்தார்
சிந்திப்போம் எந்நாளும் சிந்தையை அதில் வைப்போம்
நிலுவையே இல்லாமல் நீங்கி விடும் துன்பங்கள் .
நிச்சயம் இதை உணர்வோம் நிதம் உரைப்போம் இதன் பெருமை
வலுவின்றி வாழ்நாளில் வாடிடும் போதினிலே
வழிநடத்தும் சிலுவையோடு வாழ்வெல்லாம் நன்றி சொல்வோம்
கொலுவை போம் நம் வீட்டில் கோமகனின் சிலுவைதனை

**மறையாசிரியர் தி.ம. சந்தியாகு,**
**வேங்கிடக்குளம் இந்தியா**

# நான் ஆடையின்றி இருந்தேன்!

(மத்தேயு 25 : 38)

மணிப்பூர் ஆடை அவிழ்ப்பு

இப்போது எனக்குத் தேவை
உன் ஆடையில்லை!
உன் ஆறுதலுமில்லை !
உன் அனுதாபமுமில்லை!
உன் வீண் போராட்டங்களும் இல்லை!
என்னைக் குறித்த வறட்டு விவாதங்களும் இல்லை !
உன் செபமும் கூட இல்லை !
ஏனெனில் உனக்கு(ம்) இவ்வாறு நடக்கும் போது
இவை எதுவும் உன் காயம் நீக்காது என்பதையும்
நீ நன்கறிவாய் !
உன் மௌனம் என் மரணம் ! உன் சகிப்பு என் சாவு !
உன் பயம் என் ஆடை அவிழ்த்தவனின் பலம் !
என்னை பலப்படுத்த எதையும் செய்யாது
என்னை பலாத்காரம் செய்தவனேயே
நீ பலப்படுத்து உன் அலட்சியத்தால் !
இயேசுநாதர் சுவாமி பாடுபட்ட பத்தாம் ஸ்தலம்..
திவ்ய...

நிறுத்து...அப்பாலே போ சா....!

நான் ஆடையின்றி இருந்தேன் !
என்னைக் கண்டு கொள்ளவில்லை ! ( மத்தேயு 25:38)

அகஸ்டின் பிரபு அ.
மதுரை உயர் மறைமாவட்டம்.

# படித்ததில் பிடித்தது

ஒரு உணவகத்தில் இங்கு அனைத்து உணவுகளும் இலவசம். ஆனால் கொஞ்சம் வாந்தி பேதி வரும் என்று எழுதி வைத்தனர். யாருமே அங்கு உணவு சாப்பிட வரவில்லை.

ஒரு பேருந்தில் இந்த பேருந்து இலவசம். கட்டணமில்லை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்யலாம். ஆனால் பிரேக் பிடிக்காது என்று எழுதி வைத்தனர். யாருமே அந்த பேருந்தில் ஏறவில்லை.

ஒரு மருத்துவமனையில் இங்கு அனைத்து சிகிச்சையும் இலவசம் ஆனால் உயிருக்கு அத்தரவாதமில்லை என்று எழுதி வைத்தனர். ஒருவர்கூட அங்கு சிகிச்சைக்கு வரவில்லை.

ஆனால் “ குடி குடியைக் கெடுக்கும்” “ குடிப்பழக்கம் உடல் நலத்திற்குக் கேடு” என்று எழுதி வைத்துவிட்டு மதுவினை விற்றால் மட்டும் ஒரு நாளைக்கு எத்தனையோ இலட்சத்திற்கு மேல விற்பனையாகிறதாம். இங்கு மட்டும் மனிதர்கள் செல்லக் காரணம்?

சிந்திப்போம், ஆரோக்கியமாக வாழ்வோம்.



# நன்றி நவில்கிறோம்

செபமாலைதாசர் சபையினர் மன்னார் மறை மாவட்டத்தில் கால் பதிக்க வழி வகுத்தவர் ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை - நன்றி தெரிவிக்கிறார் ஏ.எம்.ஸ்ரிபன் அடிகளார்

தோலகட்டி செபமாலைதாசர் - செபமாலைக் கன்னியர் துறவு சபையினர்க்கு மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசேப் ஆண்டகை ஆற்றிய அனைத்துப் பணிகளுக்கும் சபையின் பெயரால் நன்றி தெரிவிக்கிறார் செபமாலைத்தாசர் சபையின் மூத்த குருவான ஏ.எம்.ஸ்ரிபன் அடிகளார் (கிறிஸ்தவ செய்தி இதழ் ஆசிரியர்)

அந்த நாட்களில் தோலகட்டி செபமாலைதாசர் செபமாலைக் கன்னியர் துறவு சபையின் நிறுவினர் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாரின் புனிதப்பட்ட ஆய்வுகள் யாழ் மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. அப்போது (குருவாக) இராயப்பு யோசேப் அடிகளார் ஆயர் தியோகுப்பிள்ளையின் பதிலாளியாக அக்குழுவில் நியமிக்கப்பட்டார். இராயப்பு ஜோசப் அடிகளாரும் இந்த நியமனத்தை பெரும் மகிழ்வோடு ஏற்று தனது பணியை ஆரம்பித்தார். அவர் தோமஸ் அடிகளாரை அறிந்த ஆயர்கள், குருக்கள், துறவியர், மக்கள் எனப்பலரையும் இலங்கையிலும் இந்தியாவிலும் நேரடியாக சந்தித்து தோமஸ் அடிகளாரின் வாழ்வு புண்ணியங்களைப்பற்றி அவர்களின் சாட்சியங்களை கேட்டறிந்து அவைகளைத் தொகுத்து ஆயர் மேதகு கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையிடம் கையளித்தார்.

இந்த புனிதப்பட்ட மறைமாவட்ட ஆய்வின் பொறுப்பாளராக நான் (ஏ.எம்.ஸ்ரிபன் அடிகளார் செபமாலைத்தாசர் சபை) செயல்பட்டதால் என்னுடனும் இவர்களைப் பற்றி அடிக்கடி நிறைய விடயங்களைப் பேசிவந்துள்ளார். இக்காலப்பகுதியில் அவர் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுவரை இந்தப்பணியை முழு அர்ப்பணிப்போடு செயல்படுத்திய அவர் மன்னார் ஆயராக பணியேற்ற பிற்பாடும் நாம் அவரை மன்னார் ஆயர் இல்லத்தில் அணுகியபோது மன்னார் மறைமாவட்டத்திலும் தோமஸ் அடிகளாரின் புனிதப்பட்ட ஆய்வுகள் நல்ல முறையில் நடைபெற எல்லா ஒழுங்குகளையும் செய்திருந்தார்.

தொடர்ந்தும் இந்த புனிதப்பட்ட ஆய்வுகளைப் பற்றி அடிக்கடி விசாரித்து வந்தார். தோமஸ் அடிகள் விரைவில் புனிதராக வரவேண்டும் என்றும் ஆசித்திருந்தார். ஆயர் அவர்கள் உயிருடன் இருக்கும் போதே பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாருக்குப் புனிதர் பட்டம் கிடைக்காது போனாலும் ஆயர் அவர்கள் தொடர்ந்தும் புனிதர் பட்டத்திற்காக இறைவரம் வேண்டுவார் என நம்புகிறேன்.

அந்த போர்க் காலத்தில் யாழ்ப்பாணம் பகுதிகளிலிருந்து அனைத்து மக்களும் 1995ஆம் ஆண்டு இடம்பெயர வேண்டிய கொடுமையான சூழ்நிலை ஏற்பட்டது. அவ்வேளையில் எமது தோலகட்டி மடம் ஏற்கனவே இலங்கை படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தது. மேலும் அங்கு எமது துறவியாகிய அருட்சகோதரர் வென்செஸ்லாஸ் அவர்கள் 20 யூன் 1986இல் தோலகட்டி ஆச்சிரம வளாகத்திலேயே துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டிருந்தார். எனவே படையினரின் ஆக்கிரமிப்புக்குப் பின் எல்லாத் துறவிகளும் யாழ் அருள் ஆச்சிரமத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

1995இல் இடம் பெயர்வின்போது எம்முடன் படித்துக் கொண்டிருந்த குருமாணவருடன் கிளாலி மார்க்கமாக மடு மாதா திருத்தலத்திற்கு வந்து சேர்ந்தோம். அப்போது ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் எமக்கு மடுத்திருத்தலத்தில் ஒரு வீடு கொடுத்து அங்கு எம்மை தங்க வைத்தார். அதன்பின் நாம் வேறு



ஒரு இடத்தில் குடியேறி எமது செபமாலைதாசர் செபப் பணிகளை ஆற்றப் பணித்தார். மேலும் அதற்கான இடத்தை தனது மறைமாவட்ட சிற்றாலயங்கள் அமைந்துள்ள ஏதாவது ஒரு இடத்தை எடுக்க முடியுமா என்றும் கேட்டிருந்தார். நாம் அந்த இடங்களை பார்வையிட்ட போதும் போர் கால சூழ்நிலையில் வாழ்வதற்கு உகந்ததாக இருக்கவில்லை.

அதை ஆயரிடம் தெரிவித்தபோது வவுனியா பகுதியில் தனது மன்னார் மறைமாவட்டத்துக்குரிய எதாவது ஒரு இடத்தை பார்வையிடச் சொன்னார். அதன்பின் அங்கு கைவிடப்பட்ட நிலையில் இருந்த ஓர் சிறுவர் இல்லத்தை திருத்தி அதில் இருந்து கொண்டு எமக்கு ஏற்ற ஒரு இடத்தை தேர்ந்தெடுக்குமாறு கூறினார். அதன்படி வவுனியா சிறுவர் இல்லத்தில் மாணவருடன் ஆரம்பித்தபோது ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களே அதை புனித சூசையப்பர் திருநாளாகிய 19 மார்ச் 1996ஆம் ஆண்டில் ஆசீர்வதித்து ஆரம்பித்து வைத்தார்.


அங்கிருந்து கொண்டு பல இடங்களைப் பார்வையிட்டு இறுதியாக வவுனியாவில் மதவு வைத்த குளத்தில் ஒரு இடத்தைத் தேர்ந்து நாம் வாங்கினோம். அதைப் பார்வையிட்ட ஆயர் மகிழ்ச்சி அடைந்தார். இங்கு பெறப்பட்ட காணிக்குள் துறவிகள் மற்றும் மாணவர்கள் வாழ்வதற்கான ஒரு மடம் கட்டப்பட்டது. புனித பாத்திமா அன்னையின் கெபியும் அமைக்கப்பட்டது. ஒரு ஆலயமும் புதிதாக உருவாக்கப்பட்டது. இவைகள் எல்லாவற்றின் அடிக்கல் நடுதல் - ஆசீர்வதித்து திறந்து வைத்தல் போன்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் ஆயர் ஜோசப் அவர்கள் வருகை தந்து மகிழ்வோடு அனைத்தையும் நிகழ்த்தி வைத்தார். குறிப்பாக புனித பாத்திமா அன்னையின் கெபியில் ஆசீர்வதித்து முதல் செபமாலையையும் ஆயர் அவர்களே ஆரம்பித்து நிகழ்த்தி வைத்தார்.

மறைந்த ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசேப் ஆண்டகை எமக்கு செய்த எல்லா உதவிகளுக்கும் தோலகட்டி செபமாலைதாசர் - செபமாலைக் கன்னியர் துறவு சபையின் சிறப்பான நன்றி கூறுவதோடு அவரது ஆன்மா இறைவனில் நிறைவு பெற எங்கள்

# மனத்தாங்கல் வேண்டாம், நல்லுறவு கொள்வோம்

மறைத்திரு. மரிய அந்தோணிராஜ்,

2 கொரிந்தியர் 3: 15–4: 1, 3–6
திருப்பாடல் 85: 8அடி–9, 10–11, 12–13 (9அ)
மத்தேயு 5: 20–26



## இணைந்திருப்பதே இறைத் திருவுளம்

மனிதன் ஒரு சமூக விலங்கு. அவனால் ஒன்றிணைந்து இருக்க முடியுமே அன்றி, தனித்திருக்க முடியாது. ஆனால், இன்றைக்கு மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக்கொண்டு மனத்தாங்கலோடு தனித்தனி தீவுகளாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய நற்செய்தியில் இயேசு, “ தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கின்றவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார்.” என்கிறார். இப்படிச் சொல்லிவிட்டு, நல்லுறவோடு செலுத்தப்படாத காணிக்கைகள் கடவுளால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று தெளிவாகச் சொல்கின்றார்.

முற்காலத்தில் கொலை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகப் பார்க்கப்பட்டது. இயேசுவோ கொலை செய்வது மட்டுமல்ல, சினம் கொள்வதும் பெரிய குற்றம்தான். அதனால் சகோதர, சகோதரிகளிடம் இருக்கும் மனத்தாங்கலைத் தவிர்த்துவிட்டு நல்லுறவோடு வாழச் சொல்கின்றார். மனிதர்கள் சக மனிதர்களோடு நல்லுறவோடு வாழ்வது கடினம்தான் என்றாலும், தூய ஆவியாரின் துணை கொண்டு நல்லுறவோடு வாழலாம்.

இன்றைய முதல் வாசகத்தில் பவுல், “ ஆண்டவரின் ஆவியார் இருக்கும் இடத்தில் விடுதலை உண்டு” என்கிறார். தூய ஆவியாரால் நமக்கு விடுதலை அளிக்க முடியும்போது, நல்லுறவோடு வாழ்வதற்கும் ஆற்றல் அளிக்க முடியும். அவ்வாறு நாம் வாழும்போது, இன்றைய நாளில் நாம் பதிலுரைப்பாடலாகப் பாடக்கேட்ட திருப்பாடல் 85 இல் சொல்லப்படுவது போல, “ நம் நாட்டில் ஆண்டவரது மாட்சி குடிகொள்ளும்.” எனவே, நாம் நம்முடைய நெறி சிறந்திருக்கும் வகையில் மனத்தாங்கலைத் தவிர்த்து, நல்லுறவோடு வாழ்வோம்.

## வேறு சில பாலங்கள் கட்டவேண்டும்

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன் தம்பி இருவரும் இணைந்து உழவுத் தொழில் செய்து வந்தனர். எல்லாமே நன்றாகப் போய்க்கொண்டிருந்தபோது, அவர்களது உறவில் விரிசல் ஏற்பட்டது. இதன் நிமித்தம் தம்பி தன் நிலத்தின் எல்லையை ஒட்டி இரவோடு இரவாக ஒரு வரப்பைக் கட்டி எழுப்பினான்.

மறுநாள் காலையில் புதிதாக முளைத்திருந்த வரப்பைப் பார்த்து விட்டு அண்ணன் அதிர்போனான். உடனே அவன், ‘ இவனை விட நான் எந்த விதத்தில் குறைச்சல்? இவனை விட நான் பெரிதாக வரப்பைக் கட்டி எழுப்புவேன்’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, அதற்குண்டான பொருள்களை வாங்கிப் கட்டடப் பணியாளர்களிடம் கொடுத்துவிட்டு, “ பணி நிமித்தமாக ஒரு வாரம் வெளியூர் செல்லவிருக்கின்றேன். அதற்குள் கொடுத்த வேலையைச் செய்து முடித்துவிடுங்கள்” என்று கட்டளை பிறப்பித்துவிட்டு வெளியூர் கிளம்பினான்.

வெளியூர் சென்றவன் தன் வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி வந்தபோது, வரப்புக்குப் பதிலாக, அதன்மேல் பாலம் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு வியந்து போனான். மறுமுனையில் தன் தம்பி இருப்பதைக் கண்டு, விரைந்து சென்று, அவனைக் கட்டித் தழுவினான். பின்னர் அவன் கட்டடப் பணியாளர்களிடம், “ ஆத்திரத்தில் நான் பெரியதொரு வரப்பைக் கட்டி எழுப்பச் சொல்லிவிட்டேன். நான் சொன்னது போல் நீங்கள் செய்திருந்தால், நாங்கள் இருவரும் என்றைக்கும் ஒன்று சேர்ந்திருக்க முடியாது ஆனால், நீங்கள் வரப்புக்குப் பதிலாகப் பாலம் கட்டி எங்களை ஒன்றுசேர்த்து விட்டீர்கள். அந்த வகையில் மகிழ்ச்சியே. இவ்வூரில் இன்னும் ஒருசில பாலங்கள் கட்டவேண்டும். அதனால் நீங்கள் இங்கேயே இருங்கள்” என்று அவர்களுக்கு அன்புக் கட்டளை கொடுத்தான்.

நாம் பிரிந்து இருக்க வேண்டும் என்பதல்ல, இணைந்து இருக்க வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். அதனால் நாம் நம்மிடமிருக்கும் பிணக்குகளைக் களைந்துவிட்டு, ஒன்றிணைந்து வாழ்வோம்.

## ஆண்டவரின் வார்த்தை

“ சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று” (திபா 133).

## தீர்மானங்கள்

1)ஆண்டவரின் விருப்பம் நாம் ஒன்றிணைந்து இருப்பதுதான். அதனால் ஒன்றிணைந்து இருக்க முயற்சி செய்வோம்.

2) சினத்தைத் தவிர்த்து நல்ல வார்த்தைகளைப் பேசுவோம்.

3) நமக்கு விடுதலை அளிக்கும் தூய ஆவியாரை நம் துணையாய்க் கொண்டு வாழ்வோம்.

# புனித ஜான் மரியவியான்னி



**st.vainney** புனிதர் என்ற புகழ் சிலருக்கத்தான் பொருத்தமாக அமையும். அந்தச் சிறப்பு புனிதரான ஜான் மரிய வியன்னியின் வாழ்வில் பொருந்தி நிற்கிறது. புனித ஜான் மரிய வியான்னிக்கு உலகம் சார்ந்த அறிவு குறைவு என்று அறியப்பட்டாலும், மற்ற குருக்களால் தனிமைப் படுத்தப்பட்டாலும் கடவுளோடு மட்டும் தனித்திருப்பது புனிதம். இறைவனோடு. இணைந்திருப்பது ஞானம் என்று உலகிற்கு உறுதியாய் அவரின் வாழ்வு வெளிப்படுத்தியது.

பிரான்சு நாட்டில் லைனஸ் என்ற நகருக்கு அருகில் உள்ள டார்டில்லி என்ற பண்ணைக் கிராமத்தில் 1786 இல் வியான்னி பிறந்தார். பிரான்சு புரட்சி ஏற்பட்ட நேரத்தில் கிறிஸ்து கொள்ளைகளை வெளிப்படையாக வாழ இயலாத சூழ்நிலை. இந்தச் சமயத்தில் புனிதரின் பெற்றோர்கள் கிறிஸ்துவத்தை மறைமுகமாகப் பின்பற்றிவந்தார்கள். அனுபவத்தில் அறிந்த கிறிஸ்துவத்தின் பெருமையை உணர்ந்தவராய் புனித வியான்னி குருவாக வாழ வேண்டும் எனப் புறப்பட்டவருக்கு ஏராளமான தடங்கல்கள்

குருவாக வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்த அவரது பெற்றோர்கள் வியான்னியை பண்ணை வேலையிலிருந்து விடுவிக்கத் தயங்கினர். மேலும் பெற்றோர்கள் இதற்குச் சம்மதித்து அனுமதித்தவுடன் இராணுவ சேவை என்ற அரசுச் சட்டம் தடையாக அமைந்தது. அதனைக் கடந்து குருமடத்தில் சேர்ந்த புனிதருக்குப் படிப்பின் வடிவில் அதிகமாகச் சவால்கள். ஜான் மரிய வியான்னி இறையியல் மறைஉண்மைகளை புரிந்து கொள்வதும், இலத்தீன் மொழியைக் கற்றுக் கொள்வதும் மிகப் பெரிய போராட்டமாக மாறியது. இதனால் குருவாக வேண்டிய நேரத்திலும் குருப்பட்டம் தள்ளி வைக்கப்பட்டது.

இச்சவாலை சாதனையாகத் தன் பக்தியிலும், நம்பிக்கையிலும் வெளிப்படுத்தியதால் குருவாக உயர்த்தப்பட்டார்.

இவரது திறமை குறைவாக மதிப்பிடப்பட்டதனால் ஒதுக்குப்புறமான சிறிய பங்காகிய அர்ஸ் கிராமத்திற்கு வியான்னி அனுப்பட்டார். வெறும் அடையாள கிறிஸ்துவ மக்களாக எந்தத் தெய்வ நம்பிக்கையும் இல்லாத கிறிஸ்துவமக்கள் மத்தியில் பணியாற்றத் தொடங்கினார். தனது செபவாழ்வாலும், தவமுயற்சிகளினாலும் மக்களின் மத்தியில் நம்பிக்கையை வென்றெடுத்தார். உணர்வுபூர்வமான தோற்றம், நடுங்கும் வார்த்தைகள் எல்லாம் எல்லாரின் உள்ளத்தைத் தொட்டன. மனமாற்றத்தினால் வாழ்வு பெற முடியும் என்ற நம்பிக்கையை மக்களின் உள்ளங்களில் பதித்தார். இதன் மூலமாகப் பல்வேறு மக்கள் ஒப்பரவு சாதனத்திற்காக அர்ஸ் நகரை நோக்கிப் படையெடுத்தனர். படிப்படியாக உண்மையான மனமாற்றத்தின் தந்தையாக மக்கள் மத்தியில் உயர்ந்து நின்றார். இதனால் ஒவ்வொரு நாளும் 16 மணிநேரம் ஒப்புரவு சாதனம் வழங்கும் குருவாக வாழ்ந்து காட்டினார்.

ஒப்புரவு அருட்சாதனம் மதிக்கப்படாத இக்கால சூழ்நிலையில், இந்தப் புனிதரின் வாழ்வு உண்மையான மனமாற்றத்தை மக்கள் மத்தியில் அளித்து அருட்சாதனத்தால் விளையும் அருளுக்கு வழிவகுக்கட்டும். புனிதரின் வாழ்வு குருக்களுக்குச் சிறந்த ஞானமாகவும் பாடமாகவும் அமையட்டும்.

## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்



**02 - 07 - 2023**

**ஆவணி ஒன்றுகூடல் நடைபெறமாட்டாது**

**03 - 09 - 2023**

# நான்காம்- ஆண்டு நினைவேந்தல்

**மண்ணில்**
1963–03–16

**விண்ணில்**
2019–07–11



## அமரர்- யசிந்தாமேரி, (மஞ்சு) விமலநாதன்

**அன்புக்கு- இலக்கணமாய்- அடுத்தவர்க்கு- மாதிரியாய்**
அர்ப்பணிப்புடனான ஆன்மீகத்தேடலிலும்
அறம் சார்ந்த நற்பணிகளிலும்
அழகியற் புதுமைப்பெண்ணாய்– அவயத்தில் வலம்வந்து
துன்புற்றோர்– துயர் துடைக்க
துணைக்கரமாய்– நீ– இருந்தாய்.
உன் நேர் கொண்ட– பார்வையும், நிமிர்ந்த
நடையும், சிந்தனை செயல்திறனும் ஆற்றல்களும்
கண்– இமைக்கும்பொழுதினிலே– காணாமல்– போனதேனோ?

**பக்கத்தில் சென்று- பாசம்- காட்டி, பரிவுடன்பேசி**
தம் தேவைகளைப் பெற்றிடவும்,
வாழ்வின்– நெறிமுறைகளை– தெளிவுறக் கற்றிடவும்
அன்னை, தந்தை– இன்றிவலி– சுமந்த நினைவுகளில்
பரிதவிக்கும்
உன் இருபிள்ளைகளின் நிலையதனை– நீ– அறிவாயா?

**உற்ற சொந்த பந்தமெல்லாம்- இவர் உடனிருந்தபோதிலும்**
பெற்ற அன்னை, தந்தை போல்– ஆகிடுமா?
வருடங்கள் நான்காகியும்– உன்பிள்ளைகளின்
மனநிலைகள்– வழமைக்கு– வரவில்லை– இன்னும்
உன்னத– தேவனிடம்– உருக்கமாய்– மண்டியிட்டால்
வல்லமைகள்– பெருகிவிடும்– நல்வரமும்
கிடைத்துவிடும்– என்பாயே......

**நீ- நிழலாய்- விட்டுச்சென்ற பணிகள் தொடர்ந்திடவும்**
இறைநம்பிக்கையும்– விசுவாசவாழ்வும்– துன்பங்களைத்
தாங்கும் மனவலிமையும்– உன்பிள்ளைகளில்
நிலைகொள்ள– வரம் வாங்கி– வருவாயா?
என்றும்– அழியா உறவில்– நிலைத்திருக்க
அன்பர் இயேசு– இல்லம் நீ சென்றாலும்
நீ–– எம்முடன்– வாழ்ந்த தருணங்கள்
விலையேறப்பெற்றவை

**எம்செல்வமே! காலத்தின்- கொடுமை இது**
என்று காலமெல்லாம் வாடுகின்றோம்
என்றும்– எம்உள்ளத்தில்– நீங்கா இடம்– பிடித்திருக்கும்
உன்ஆன்ம– ஈடேற்றத்திற்க்காக
நிதமும்– இறைவனையே– இறைஞ்சுகின்றோம்.

**சகோதரி– லூசியாமேரி– மற்றும் சகோதர சகோதரிகள்**




உன் வார்த்தை வாசித்து
வாழ்வாக்கும்
போதெல்லாம்...
தேவனே எனை நாடும்
உன் தேடல் ஞாபகம்!!!

என் வாழ்க்கை
பயணத்தில் நான்
நடக்கும் போதெல்லாம்....
இறைவாழ்வின்
பாதையை காட்டும் உன்
சுவடுகள் ஞாபகம்!!!

உறவுகள் எனை
வெறுத்தும்..உறவாடிய
ஞாபகம்!!!

உணர்வுகள்
இழந்தபோதும்..உன்
வலிமை ஞாபகம்!!!

உனக்காய் இருப்பேன்
என நீ சொன்ன ஞாபகம்!!!

தனிமையில் நான்
கலங்கி அழுகையிலே...
தாயாய் தாலாட்டும்
உந்தன் ஞாபகம்!!!

## வாரும் சிருஷ்டிகர் ஸ்பிரித்துஸ்

ஓ பரிசுத்த ஆவியே!



வாரும் சிருஸ்டிகர் ஸ்பிரித்துஸ்
வந்தெம் முள்ளம் வீற்றிருந்து
தாரும் பேரின்ப வரங்கள்
உந்தன் சிருஸ்டியாம் எங்கட்கு

தேற்றரவாளர் ஆனவர்
தேவனின் கொடை நீரன்றோ.
தேவஸ்நேக ஊற்றாகிய
தேவாபிஷேக நாயகர்

நல்ல தேவனின் கைவிரல்
நல்கிய கொடை ஏழினால்
வல்ல பிதா வாக்குத்தத்தம்
சொல்ல எம் நாவுக்கருள்வீர்

உம்மால் தேவ தந்தையையும்
திருச்சுதன் யேசுவையும்
எம்மான்மாவில் நேசிப்பதால்
ஸ்பிரித்துவாம் உம்மை வாழ்த்துவோம்.

பிதாவுக்கென்றும் மகிமை
உயிர்த்த சுதன் அவர்க்கும்
சதாகாலமும் ஸதோத்திரமே
உரியதாம் ஸபிரித்துவுக்கும் ஆமேன்.

# நேர்மையானவர்களை அல்ல


## பாவிகளையே அழைக்க வந்தவன்

அம்புறோஸ் பீற்றர் மறையாசிரியர்.

இஸ்ராயேல் மக்கள் தம்மை அன்பு செய்வதை விடுத்து வேற்றுத் தெய்வங்களையும், புறவினத்துக் கடவுள்களையும் வழிபட ஆரம்பித்தனர். தன் மனைவி விபச்சாரியாக மாறிவிட்டால் எவ்வளவு வேதனை ஒவ்வொரு கணவனிடத்திலும் இருக்குமோ, அதே வேதனைதான் யாவே இறைவனுக்கும் இருந்திருக்கும். அவ்வேளையில் ஓசேயா இறைவாக்கினர் வழியாக தம்மை அன்பு செய்ய அழைப்பு விடுக்கின்றார் யாவே இறைவன். அந்த அழைப்பை சாதாரணமான முறையில் விடுவிக்கவில்லை, மாறாக ஓசேயா இறைவாக்கினரின் வாழ்க்கை வழியாகவே வெளிப்படுத்துகின்றார். ஓசேயாவை கோமோ என்ற ஒரு பெண்ணை மணந்துகொள்ளச் செய்கிறார். ஆனால் அவளோ ஒரு விபச்சாரி. ஓசேயாவை விட்டு ஓடி விடுகிறாள். ஓசேயா மனம் தளராமல் அவளைத் தேடி திரும்ப அழைத்து தம்முடன் சேர்த்துக்கொள்கிறார்.

இவ்வாறு செய்வது ஒரு கரடு முரடான பாதையை தேர்வு செய்வதற்கு சமமானதே. இதேபோல் தான் யாவே இறைவனும் மோசமான பாதை ஒன்றைத் தேர்ந்து கொள்கிறார். இஸ்ராயேல் மக்கள் தம்மை விட்டு ஓடி விட்டாலும், விடாமல் அவர்களை தம்மை அன்பு செய்ய அழைக்கிறார் இறைவன். "பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன். எரிபலிகளை அல்ல கடவுளை அறியும் அறிவையே விரும்புகிறேன் " என்பது இறைவிருப்பம்.

ஆபிரகாமின் கதை நம்மனைவருக்கும் தெரிந்ததே. ஏறத்தாழ தமது நூறாவது வயதில் பிள்ளையில்லாத அவருக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. "உன் வழிமரபினர் எண்ணற்றவர்களாக இருப்பர்." என்று நாம் அவரது நிலையில் இருந்திருந்தால் எள்ளி நகையாடியிருப்போம். நம்ப மறுத்திருப்போம். ஆனால் ஆபிரகாம் அப்படி இல்லை. தம் மனைவி சாராளின் கற்பப்பை செத்தது போல ஆன நிலையிலும், தம் வயது பிள்ளைப் பாக்கியம் பெறும் அளவிற்கு உகந்ததில்லை என்று அறிந்த நிலையிலும் அவர் நம்பினார், விசுவசித்தார்,எதிர்நோக்கினார், விளைவு விசுவாசத்தின் தந்தையானார். பிள்ளைப் பாக்கியம் இருந்தது. ஈசாக்கு அவருக்கு பிறந்தார். அவர் வழியாக இஸ்ராயேல் இனம் வளர்ந்தது.



ஆபிரகாம் தனது விசுவாசத்தினால் தேர்ந்தெடுத்ததும் கரடு முரடான மோசமான வழிதான். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்று இருந்தாலும் விசுவசித்தார். உங்கள் திருச்சட்டத்தை அல்ல விசுவாசத்தையே விரும்புகி றேன் என்பது இறைவிருப்பம்.

இவை அனைத்தையும் விட தலை சிறந்த உதாரணமாக இறைமகன் இயேசுநமக்கு காட்டப்படுகின்றார மத்தேயு என்னும் வரி தண்டுபவரை தம்சீடராக அழைக்கிறார். அழைத்தது மட்டுமன்றி அவர் வீட்டிற்குச் சென்று இன்னும் பல பாவிகளுடன் விருந்துண்கிறார். யூத சமுதாயத்தில் வரிதண்டுபவரை விபச்சாரியைப் போல கருதினார்கள். விபச்சாரி குடும்ப வாழ்வில் விபச்சாரம் செய்பவர், வரிதண்டுபவர், சமூக வாழ்வில் விபச்சாரம் செய்பவர். ஏனெனில் அவர்கள் உரோமை யர்களுக்கு கையாளாகவும், கூலிகளாகவும் பணியாற்றினர். உரோமையர் ஒவ்வொரு முறையும் வந்து வரி வாங்க முடியாததால் பாலஸ்தீனத்தில் பல்வேறு பகுதிகளை ஏலத்திற்கு விட்டனர். இந்த வரி தண்டுபவர்களாகிய யூதர்களே தங்கள் உயிரான பாலஸ்தீன நிலத்தையே ஏலத்திற்கு எடுத்து தம் இரத்த உறவுகளாகிய யூதர்களிடத்திலே வரி வசூலித்து வந்தனர். இத்தகைய போக்கு விபச்சாரமாகவே கருதப்பட்டது.

ஆனால் இயேசு இத்தகைய ஒரு வரி தண்டுபவரை தம் சீடராக அழைக்கிறார். வாழ்வில் வரும் துன்ப துயரங்களைக் கண்டு பயப்படாது பாவத்திற்கு மட்டுமே பயந்து வாழக்கூடிய வாழ்வையும், ஒரு மனப்பக்குவத்தையும் நாம் ஒவ்வொருவரும் பெற்றிருத்தல் மிக மிக அவசியம். துன்பம் ஒரு வழியில் நம்மைத் தாக்கலாம். துயரம் ஒரு வழியில் நம்மைத் துரத்தலாம். ஆனால் "அஞ்சாதே" என்ற இறைவனின் வார்த்தை பல வழிகளில் நம்மைக் காப்பாற்றும். இந்த ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையை இறைவன் மீது நாம் வைப்போம். "உங்கள் கவலையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள் ஏனெனில் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்." நமது கவலைகளை, சிலுவைகளை இறைவனிடம் ஒப்படைப்போம். இறைவன் துன்ப துயர வேளையில் நம்மோடு இருந்து வழிகாட்டுவார்.

## சிந்திப்போம் சிந்திப்போம்





ஒரு உணவகத்தில் இங்கு அனைத்து உணவுகளும் இலவசம். ஆனால் கொஞ்சம் வாந்தி பேதி வரும் என்று எழுதி வைத்தனர். யாருமே அங்கு உணவு சாப்பிட வரவில்லை.

ஒரு பேரூந்தில் இந்த பேரூந்து இலவசம். கட்டணமில்லை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்யலாம். ஆனால் பிரேக் பிடிக்காது என்று எழுதி வைத்தனர். யாருமே அந்த பேரூந்தில் ஏறவில்லை.

ஒரு மருத்துவமனையில் இங்கு அனைத்து சிகிச்சையும் இலவசம் ஆனால் உயிருக்கு அத்தரவாதமில்லை என்று எழுதி வைத்தனர். ஒருவர்கூட அங்கு சிகிச்சைக்கு வரவில்லை. ஆனால் “ குடி குடியைக் கெடுக்கும்” “ குடிப்பழக்கம் உடல் நலத்திற்குக் கேடு” என்று எழுதி வைத்துவிட்டு மதுவினை விற்றால் மட்டும் ஒரு நாளைக்கு எத்தனையோ இலட்சத்திற்கு மேல விற்பனையாகிறதாம். இங்கு மட்டும் மனிதர்கள் செல்லக் காரணம்? சிந்திப்போம், ஆரோக்கியமாக வாழ்வோம்.

# வாழ்வு தரும் உணவு



ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஒரு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளச் சென்றார்கள். அவர்கள் பயணம் செய்த விமானம் பனிமலை ஒன்றில் விபத்துக்குள்ளானது. ஏழு பேர் இருந்த அந்த விமானத்தில் ஐந்துபேர் விபத்தில் இறந்துவிட்டனர். இருவர் உயிர் தப்பினர். இந்த விமானம் எங்கு விழுந்து நொறுங்கியது என்பதை இரண்டு மாதங்களுக்குப் பின்னர்தான் ஜெர்மனி அரசால் கண்டுபிடிக்க முடிந்தது அதன் பின்னர் உயிரோடிருந்த இரண்டு வீரர்களையும் மீட்டு நாட்டுக்கு அழைத்துச் சென்றபோது பலர் இவர்களை நாட்டுக்குள் நுழைய விடக்கூடாது என்றார்கள்.

காரணம் இந்த இரண்டு மாதங்களும் அவர்கள் உணவு கிடைக்காத நிலையில் தங்களோடு இருந்து இறந்துபோன தங்கள் நண்பர்கள் ஐவரின் உடலையும் தின்று தங்கள் உயிரைத் தக்கவைத்துக் கொண்டிருந்தனர்.

மனித இறைச்சியை உண்ட இவர்களை எப்படி நாட்டு மக்களாக ஏற்றுக் கொள்வது என்பதுதான் பிரச்சனை. " இந்தச் சூழ்நிலையில் இறந்துபோன வீரர்களின் பெற்றோர்கள் ஒன்றிணைந்து ஓர் அறிக்கை விட்டனர். அதில் இறந்துபோன எங்கள் பிள்ளைகளை நாங்கள் இந்த உயிரோடு இருக்கும் விளையாட்டு வீரர்களில் காண்கிறோம்.எங்கள் பிள்ளைகள் இவர்களில் உயிர் வாழ்வதாகக் கருதுகிறோம் என்று சொன்னதும் மக்கள் அந்த விளையாட்டு வீரர்களை ஏற்றுக் கொண்டார்களாம். இங்கே மனித இறைச்சியை உண்டு அதனால் இறக்காமல் உயிர்வாழ்ந்த ஒரு நிகழ்வைப் பார்க்கின்றோம். ஆனால் வரலாற்றில் அந்த விளையாட்டு வீரர்கள் இறப்பது உறுதி.

நம் ஆண்டவராகிய இயேசு திருவுடல் திருஇரத்தப் பெருவிழா நற்செய்தியில் " **வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்** " (யோ. 6:51) என்று அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். தன் உடல் சாகா வரம் தரும் உணவு என்கிறார் இயேசு.

**சாகா வரம் தரும் உணவு என்றால் என்ன பொருள்?**

நற்கருணை அருந்துபவர்கள் எல்லாரும் இந்த உடலில் சாகமாட்டார்கள் என்றா பொருள்? "உங்கள் முன்னோர்கள் பாலை நிலத்தில் மன்னாவை உண்டபோதிலும் இறந்தனர். உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த இந்த உணவே" (யோ. 6:49, 50). உங்கள் முன்னோர்கள் மன்னாவை உண்டனர். ஆயினும் இறந்தார்கள்.அதாவது மன்னாவை உண்டும் தங்கள் இலக்கான வாக்களிக்கப்பட்ட நாட்டினுள் நுழையவில்லை. மோசே உள்பட எவருக்கும் அந்தப் பேறு கிட்டவில்லை. ஆனால் இயேசுவை (நற்கருணை) உண்பவர்கள் இலக்கை அடைவார்கள்.

வாழ்க்கை என்பது இலக்கு நோக்கிய பயணம். அப்படியானால் பயணத்தின் இலக்கு எது? பயணத்தின் தன்மை என்ன? பயணத்துக்கு வலிமை தருவது எது? இந்தக் கேள்விகளுக்குப் பதில் தருகிறது திருவுடல் திருஇரத்தப் பெருவிழா வழிபாடு.

பயண இலக்கு. விண்ணகம் நோக்கியது நம் வாழ்க்கைப் பயணம். "நிலையான நகர் நமக்கு இங்கு இல்லை. வரப்போகும் நகரையே நாம் நாடிச் செல்கிறோம் "(எபி. 13:!4).

இவ்வுலகில் நாம் வழிப்போக்கர்களே! முதல் வாசகத்தில் வரும் இறைவாக்கினர் எலியாவின் பயணம் மனித வாழ்க்கைப் பயணத்தின் ஒரு முன்னடையாளமே! அவர் எங்கே போகிறார்? ஒரேபு மலையை நோக்கிப் பயணிக்கின்றார். அதாவது சீனாய் மலை நோக்கி. அங்குதானே மோசே கடவுளைச் சந்தித்தார்! பொதுவாக மலைகள் கடவுளின் உறைவிடமாகவே கருதப்படுகின்றன. குன்றுதோறும் குடியிருக்கும் குமரா என்றுதானே பிற சமயத்தினர் கூடத் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர்.ஒரேப் மலையை நோக்கி எலியா செல்கிறார் என்றால் கடவுளை நோக்கிப் பயணிக்கிறார் என்று பொருள்.

நமக்கும் வாழ்க்கைப் பயணத்தின் இலக்கு கடவுளே! "ஆடி அடங்கும் வாழ்க்கை ஆறடிக் குழிக்குள்ளே" என்று நாம் வாழக்கூடாது. ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ" என்று விரக்திக் கீதம் பாடக்கூடாது. இதையே இயேசு நற்செய்தியில் "நிலை வாழ்வு" என்று குறிப்பிடுகிறார். இயேசுவை உண்பவர்கள் இலக்கை அடைவார்கள்.

பயணத்தின் தன்மை. அது பாலைவனப்பாதை. இறைவாக்கினர் எலியா தன் உயிரைக் காத்துக் கொள்ள மேற்கொண்ட சாவுப்பயணம். எதிர்ப்புக்களையும் இடர் பாடுகளையும் இழிவுகளையும் ஏளனங்களையும் எதிர்கொள்ள மனவலிமை இழந்த விரக்திப் பயணம்.

இறைவனை அடையக்கூட இறைவனின் அருள் வேண்டும். சொந்த முயற்சியாலும் முனைப்பாலும் சொர்க்கத்துக்கான கோபுரம் கட்ட முயன்றவர்களின் கதி (தொ. நூ. 11) நாம் அறிந்ததுதானே! **இயேசுவே நம் வழி. "வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாயன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை " (யோ. 14:6).**

நாம் நமக்காக மட்டும் படைக்கப்படவில்லை. இறைவனுக்காகவும் நாம் சார்ந்த சமுதாயத்திற்காகவும் படைக்கப்பட்டுள்ளோம். ஆற்ற வேண்டிய கடமைகள் நிறைய உண்டு. எனவே "எழுந்து சாப்பிடு. ஏனெனில் நீ நீண்ட பயணம் செய்ய வேண்டும்" என்று வானதூதர் அப்பமும் தண்ணீரும் கொடுக்க அவ்வுணவினால் வலிமை அடைந்த எலியா நாற்பது பகலும் நாற்பது இரவும் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார்" (1 அரசர் 19:7–8).

பயணத்துக்கான வலிமை, வாழத் தேவையான வலிமையையும் நம்பிக்கையையும் தருவது, நோயில்பூசுதலில் வழி உணவைப் பெற்றுக் கொள் என்று சொல்லி நற்கருணை வழங்கப்படுகிறது. அது வழி உணவு மட்டுமல்ல. பயண முடிவில் உயிர்ப்பின் உறுதிப்பாடு மகிமையின் அச்சாரம். **"எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோ. 6:54).**

மிகுதி 18ம் பக்கம்

# வத்திக்கான் செய்திகள்



**அமைதி என்பது, உண்மையிலும், பிறரன்பு பணிகளிலும்தான் உள்ளது**

அறிவார்ந்த பிறரன்புப் பணிகள் என்பது, ஆராய்ச்சி மையங்களுக்குள் அடங்கிப்போய்விடக்கூடாது மாறாக, அது புதுப்பிக்கப்பட்ட புதியதொரு அமைப்பை உயிர்ப்பித்து நிலைநிறுத்த வேண்டும் என்று கூறியுள்ளார் **திருத்தந்தை பிரான்சிஸ்**

**– இயேசுவை பின்பற்றும் நாம், போர்களை விடுத்து அமைதியைத் தேடுவோம்**

கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம், போரை விடுத்து அமைதிக்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்: திருத்தந்தை பிரான்சிஸ். முழுமையான ஒன்றிப்பு என்பது தூய ஆவியாரின் கொடை என்பதையும், அவரின் வழித்துணையில் இவ்வொன்றிப்பு தேடப்பட வேண்டும் என்பதையும் நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இதுதான் தூய ஆவியாரின் வழிமுறை என்பதை அறிந்துகொண்டவர்களாய் அவரிடம் அயராது மன்றாடுவோம், என்றும், நமது துயரங்கள் மற்றும் மகிழ்ச்சிகள், நமது வேதனைகள் மற்றும் நம்பிக்கைகள் என நாம் நம் இதயத்தில் சுமக்கும் அனைத்தையும் சகோதரர்களாக ஒருவரொருவருடன் பகிர்ந்து கொள்வோம் என்றும் தெரிவித்தார். **திருத்தந்தை பிரான்சிஸ்.**

**– சவால்களைச் சந்திக்கும் புனித மக்கள் :** தங்கள் வாழ்வில் எதிர்ப்புகளைச் சந்திக்கும் புனித வாழ்வு வாழும் ஆண்களும் பெண்களும் இறைவேண்டல் வழியாக நம்பிக்கையின் ஒளியை ஏற்றுகின்றனர். புனிதமான பெண்களும் ஆண்களும் மற்றவர்களை விட எளிதான வாழ்க்கையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர்களும் சவால்களையும் எதிர்ப்புகளையும் சந்தித்தவர்கள்தான் என்று கூறியுள்ளார் **திருத்தந்தை பிரான்சிஸ்**

**புனிதர்கள் பேதுரு பவுல் போன்று, திருத்தூதர்களாக இருங்கள்!:**

இறைவனைப் பின்பற்றி, தொடர்ந்து பணிவுடன் அவரைத் தேடுவதன் வழியாகத் திருஅவையாக வளர்வது நல்லது : உயிர் வாழ்வதற்கு ஆக்ஸிஜன் தேவைப்படுவது போல, திருஅவைக்கு நற்செய்தி அறிவிப்புத் தேவைப்படுகிறது என்றும், கடவுளின் அன்பையும் நற்செய்தியின் மகிழ்ச்சியையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் திருஅவை வாழ முடியாது என்றும் உரைத்தார் **திருத்தந்தை பிரான்சிஸ்**

## இவர்கள் எவ்வாறு மரித்தார்கள் என்று தெரியுமா?

***மத்தேயு:–** எத்தோபியா நாட்டில் ஈட்டியால் குத்தப்பட்டு குடல் சரிந்து இறந்தார். இவர் குடல் சரிந்து இறந்தாலும் உயிரிழந்து கிடக்கும் கிறிஸ்தவத்தை உயிர்பிக்கிறது இவர் எழுதிய மத்தேயு நற்செய்தி நூல்.

***மாற்கு:–** அலெக்சண்டரியா பட்டணத்தில் தெருக்களில் இழுத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார். இவரை வீதிகள் தோறும் இழுத்துச் செல்லப்பட்டு சாகடிக்கப்பட்டாலும் இவர் எழுதிய மாற்கு நற்செய்தி நூல் வீதிதோறும் பிரசங்கிக்கப்பட்டுக் கொண்டே வருகிறது.

***லூக்கா:–** கிரேக்க நாட்டில் ஒலிவமரத்தில் தூக்கிலிடப் பட்டு கொல்லப்பட்டார். ஆனால் இவர் எழுதிய லூக்கா நற்செய்தி நூல் பாவ சேற்றில் வாழும் பலரை இன்றும் தூக்கி எடுத்துக்கொண்டே இருக்கிறது.

***யோவான்:–** கொதிக்கும் எண்ணையில் போடப்பட்டும் சாகாததினால் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டார். அங்கிருந்து அவர் எழுதியதே வெளிபடுத்தல் சுவிசேஷ நூல், பட்டினி கிடந்து சுட்டெரிக்கும் வெயிலில் சுருண்டு விழுந்து இறந்தாலும் வாழ்வில் வாழ வழியின்றி சுருண்டு விழ கிடப்பவனை எழும்பி நடக்கச் செய்கிறது இவர் எழுதிய யோவான் சுவிசேஷம்.

*** அந்திரேயா:–** சிலுவையில் அறையப்பட்ட பின்னர் சிலுவையில் இருந்தே பிரசங்கிக்க வற்புறுத்தப்பட்டிருக்கிறார். பிரசங்கித்துக்கொண்டே மரித்தார்.

***பர்த்தலோமியு:–** உயிரோடு தோலுரிக்கப்பட்டு நரக சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

***தோமா:** இந்தியாவின் சென்னையில் ஈடியால் குத்தி கொலை செய்யப்பட்டார்.

***யூதா:–** மரத்தில் கட்டி அம்புகள் எய்து கொல்லப்பட்டார்

***பர்ணபா:–** கலோனிக்கா என்ற நகரில் கல் எறிந்து கொல்லப்பட்டார்.

***பேதுரு:–** ரோமில் சிலுவையில் தலைகீழாக வைத்து அடித்து கொல்லப்பட்டார்.

***பெரிய – யாக்கோபு:–** எருசலேம் நகரில் தலையை வெட்டி கொல்லப்பட்டார்.

***சின்ன – யாக்கோபு:–** கோபுரத்தின் உச்சியிலிருந்து தள்ளப்பட்டும் சாகாததால் அடித்தே கொல்லப்பட்டார்.

***பவுல்:–** நீரோ என்ற ரோம பேரரசனால் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவம் சந்தித்த வன்கொடுமைகள் தான் இவை. ஆனாலும் ஒரு ஒற்றுமை என்னவென்றால் சாதித்த பின்னர் தான் சாகடிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவை போதித்த பின்பு தான் புதைக்கப்பட்டுள்ளனர். நாமும் புதைக்கப்படும் முன் விதைத்துவிடுவோம். அழிக்கப்படும் முன் ஆத்தும அறுவடை செய்வோம். மரணம் வந்து கொண்டே இருக்கிறது. கொடுக்கப்பட்ட தருணம் சென்று கொண்டே இருக்கிறது. இப்போதாவது சுதாகரிப்போம். சுயத்துக்கு மரிப்போம் தாழ்மையை தரிப்போம். ஆவியின் கனி கொடுப்போம். உண்மை கிறிஸ்தவனாய் மாறுவோம் சுவிசேஷத்தை வாழ்ந்து காட்டி கூறுவோம். ஆத்துமாக்களோடு பரலோகம் செல்வோம். தேசம் பரமனை அறியட்டும். **GOD BLESS YOU**




# சாகாத வரம்



வையாபுரி பட்டினம் என்ற நகரம் கடற்கரை ஓரத்தில் அமைந்திருந்தது. வையாபுரி பட்டினத்தில் முத்து வியாபாரி மாணிக்கத்தை தெரியாதவர் இருக்க முடியாது. மாணிக்கத்தின் வீடு அரண்மனையைப் போல் விசாலமாக இருக்கும்.

முத்து வியாபாரி மாணிக்கத்திற்கு முத்து, ரத்தினம், வைரம் என்று மூன்று மகன்கள்.

இவர்களில் பெரியவன் முத்து வெளிநாடுகளில் வியாபாரம் செய்து பெரும்பொருள் ஈட்டினான்.

அவன் தம்பி ரத்தினமும், வைரமும் உள்ளூர் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டனர்.

முத்து வியாபாரி மாணிக்கத்திற்கு ஒரு நாள் திடீரென்று உடல்நிலை சரியில்லாமல் போனது. தான் இறந்து விடுவோம் என்று தோன்றியது. சொத்துக்கள் அனைத்தையும் உள்ளூரில் இருக்கும் தனது மகன்களிடம் ஒப்படைத்து விட்டு இறந்துபோனார்.

பேராசை கொண்ட ரத்தினமும், வைரமும் அப்பாவின் சொத்துக்களை இரண்டாகப் பிரித்துக் கொண்டு அண்ணன் முத்துவை கொலை செய்ய திட்டமிட்டனர். ஒரு நாள் அண்ணன் முத்து திரும்பி வந்தான். அவனிடம் சொத்துக்களை மூன்றாக பிரித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

அண்ணனும் தம்பிகள் சொன்னதை நம்பினான். ஆனால் அன்று இரவே முத்துத் தூங்கி கொண்டிருக்கும் போது அவனை அடித்து ஒரு குளத்தில் வீசி எறிந்தனர்.

அடுத்த நாள் அந்த குளக்கரையில் இருந்த கோவிலின் எதிரில் படுத்து கிடந்தான் முத்து. ஆனால் அவன் உடம்பில் எந்த விதமான காயமும் இல்லை. தூங்கி எழுந்த முத்து, தனக்கு முன்னால் பிரத்யட்சமாய் கடவுள் தோன்றியிருப்பதைக் கண்டு வணங்கினான்.

“என்ன நடந்தது...?” என்றார் கடவுள். நடந்ததைச் சொன்னான் முத்து.

“இனி உனக்கு எந்த ஆபத்தும் வராது. 400 ஆண்டுகள் வரை நீ வாழ்வாங்கு வாழ்வாய்....” என்று வரமளித்து விட்டு கடவுள் மறைந்தார். முத்து வீட்டிற்குத் திரும்பினான். ரத்தினமும் வைரமும் அதிர்ச்சியடைந்தனர்.

“காலையில் உங்களைக் காணாமல் துடித்துப் போனோம்... உங்களைப் பார்த்த பின்னர் தான்..... எங்களுக்கு உயிரே வந்தது” என்று சொல்லி அழுதனர்.

“என்ன நடந்தது......” என்று கேட்டனர்.

எதையும் மறைத்துப் பேசத் தெரியாத முத்து நடந்தது அனைத்தையும் ஒன்றுவிடாமல் சொன்னதுடன், 400 ஆண்டுகள் சாகாமல் வாழ பெற்ற வரத்தையும் பற்றி கூறினான்.

தாங்களும் இதே போல் அதிக ஆண்டு வாழவேண்டும் என்று திட்டமிட்டனர்.

பேராசை பிடித்த ரத்தினமும், வைரமும் தங்கள் இருவரையும் அடித்து அந்த குளத்தில் வீசி எறியும்படி ஏற்பாடு செய்தனர். அடுத்த நாள் அவர்கள் இருவரும் கோவிலின் எதிரில் தூங்கியபடி கிடந்தனர். தூங்கி எழுந்தனர். அவர்கள் எதிரில் கடவுள் தோன்றினார்.

“உங்களுக்கு என்ன நடந்தது”? என்றார் கடவுள். தங்களை விரோதிகள் அடித்துப் போட்டதாக கூறினர்.

“கடவுளே நான் 1000 ஆண்டு சாகாமல் வாழவேண்டும்.....” என்றான் ரத்தினம். “நான் 2000 ஆண்டு சாகாமல் வாழ வேண்டும்” என்றான் வைரம். இப்படி ஆண்டுகளை ஏற்றிக் கொண்டே போனார்கள்.

“நான் சொல்வது போல் செய்தால் உங்கள் திறமைக்குத் தகுந்தவாறு பத்தாயிரம் ஆண்டுகள் கூட சாகாமல் வாழலாம்..” என்றார் கடவுள். “சொல்லுங்கள் சொல்லுங்கள்” என்றனர் இருவரும் அவசரம் அவசரமாக.

“கோயிலில் எதிரில் இருக்கும் இந்த குளத்தில் நீங்கள் மூழ்கி எழும் ஒவ்வொரு மணித்துளிக்கும் 100 ஆண்டுகள் சாகாமல் வாழும் வரம் கிடைக்கும்” என்று கடவுள் சொல்லி முடிப்பதற்குள் இருவரும் குளத்தில் குதித்தனர். நீருக்குள் மூழ்கினர். ரத்தினத்தை விட 100 ஆண்டாவது அதிகம் பெற வேண்டும் என்று வைரம் நினைத்தான். வைரத்தைவிட 100 ஆண்டு அதிகமாகப் பெற வேண்டும் என்று நினைத்தான் ரத்தினம்.

யார் அதிக ஆண்டு சாகாமல் இருக்கும் வரத்தைப் பெறப் போகிறார் என்று பார்த்தபடி கடவுள் நின்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் வைரமும், ரத்தினமும் பிணமாக குளத்தில் மிதந்தனர்.

## சின்னக் கரங்களே!

**இப்பகுதியை அலங்கரிக்க உங்கள் கைகளால் வரைந்த வண்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கின்றோம். எனவே தயங்காமல் உங்கள் சித்திரங்களை எமக்கு அனுப்ப மறவாதீர்கள்.....**



# ஆன்மாவோடும் உடலோடும் விண்ணக மகிமைக்குள் எடுத்துக் கொள்ளப்பட்ட அன்னை மரியாள்

பூலோகத்தில் பெற்ற தாயைப் போற்றாத ஜீவன் இல்லை. தாயை மதிப்பதாலேயே தாய் நாடு என்றும் தாய் வீடு என்றும் சொல்கிறோம். தாயிற்சிறந்த தொரு கோயில் இல்லை என்றும் அன்னை ஓர் ஆலயம் என்றும் பெருமை பாராட்டித் தாயைத் மதிக்கிறோம். இந்த தாய்களுக்கெல்லாம் தாயாக விளங்குபவர் அன்னை மரியாள். மண்ணகத் தாய் இம்மண்ணகத்தில் மட்டும்தான் தாய். ஆனால், தாய் மரியாளோ மண்ணகத்திற்கும் விண்ணகத்திற்கும் தாய். அவர் என்றும் வாழும் தாய்! அன்னை மரியாள் இறைவன் தேர்ந்து கொண்ட ஆலயம். இறை இயேசு உறைந்த ஆலயம். மாசுமருவற்ற பரிசுத்த ஆலயம். தம் இறை மகனாம் இயேசுவின் வாழ்க்கையை ஜெபமாலையாக்கி தியானிக்கச் செய்த ஜெபமாலை மாதா. பாவச் சேற்றில் விழும் மாந்தர் பரமனிடம் சென்று யாசிக்கப் பயப்படும்போது வலிமையுள்ள மிகச் சிறந்த பரிந்துரையாளர்தான் நம் தாய் மரி.

வரலாற்றில், விவிலியப் பக்கங்களில், மரியன்னை தம் தாழ்ச்சியினால் உலகிற்கு மறைக்கப்பட்டு இருந்தார்கள். ஏன் நற்செய்தியாளர்கள் லூக்கா உட்பட அன்னையை முழுமையாக அறிந்திருக்கவில்லை. நாமும் அன்னையைப் பற்றி முழுமையாய் அறியவில்லை. எனவே தான் திருச்சபையும் புனிதர்களும் அவளை "மறைந்த இரகசிய அன்னை" என அழைக்கின்றனர்.

எனினும், மீட்பு வரலாற்றில் அவளின் இடம் நிகரற்றதே. இறைவன் தமது திருச்சபையின் ஊடக அன்னையைப் பெருமைப்படுத்த திருவுளம் கொண்டார். திருச்சபைக்கு தாம் கொடுத்த அதிகாரத்திற்கு அமைய மண்ணுலகில் அன்னையின் "வணக்கம்" அனுமதிக்கப்பட்டது. எனவே விண்ணுலகிலும் அனுமதிக் கப்பட்டது. எனவே அன்னை மரியாள் திருச்சபைக்கு தாயாகவும், உலகிற்கு தாயாகவும், குடும்பத்திற்கு தாயாகவும் உயர்த்தப்பட்டார்..

ஏனோக், எலியா போன்ற சிலர் மண்ணுலக வாழ்விலிருந்து விண்ணுலக வாழ்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக விவிலியம் கூறுகிறது. மரியாளின் விண்ணேற்பு பற்றி விவிலியம் தெளிவுறக் கூறாவிடினும் அது மனிதரின் முடிவில்லா வாழ்வு பற்றிய படிப்பினைக்கு உரியதே. (யோவா 6 : 54, 11 : 27) என்பதில் சந்தேகமில்லை. இவற்றில் எல்லாம் உலகில் இறுதி நாளில் நிகழ விருக்கின்ற மனிதரின் உயிர்ப்பைப் பற்றித்தான் சொல்லப்படுகிறது. எனவே தான் யோவான் நற்செய்தியாளர் கூறுகையில் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எழுதினால் இந்நூலை இந்த உலகமே கொள்ளாது. (யோவா 21 : 25)

இதனால் தான் ஏறக்குறைய கி. பி. 3 ஆம் நூற்றாண்டில் தொடங்கிய இந்த நம்பிக்கை கி. பி. 20 ஆம் நூற்றாண்டில்தான் (1950) திருச்சபையால் விசுவாச உண்மையாக அறிவிக்கப்பட்டது.

பாவ மாசு எதுவுமின்றி அன்னை மரியாள் பிறந்ததால் சாவிலும் அது அவரை தன் பிடிக்குள் வைத்திருக்க இயலவில்லை. பாவத்தின் விளைவான சாவும், அழிவும் அவரை அண்ட முடியவில்லை. கருவறை தொடங்கி கல்லறை வரை கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றினார். அன்னை மரியாள் இயேசு தம் சிலுவைச் சாவால் பெற்றுத் தந்த மீட்பின் பலனை அனுபவிக்கும் முதற் கனியாக அன்னை மரியா விளங்குகிறார்.



வான தூதர் கபிரியேலின் வாழ்த்துச் செய்தியைக் கேட்ட மரியாள் "ஆகட்டும்" என்று கூறி இறை மகனை தன்னில் ஏற்றுக் கொண்டார். வார்த்தை யானவரின் மண்ணக வாழ்வு தொடங்கியது. மரியின் மண்ணக வாழ்வு நிறைவுற்ற போது இறை மகனும் "ஆகட்டும்" என்று கூறி தம் அன்னையை விண்ணில் ஏற்றுக்கொண்டார். மரியின் விண்ணக வாழ்வு தொடங்கியது. ஆக இயேசுவின் இந்த 'ஆகட்டும்' என்பது மரியாளின் 'ஆகட்டும்' என்பதன் எதிரொலி. இதனால் தன்னை ஒப்படைத்த மரியா வார்த்தையானவர் மனுவுடலேற்பதற்குத் தன் உடலைக் கொடுத்தார். வார்தையையே தம் கருவில் சுமந்தார். 'ஆகட்டும்' என்ற நாளிலிருந்து கிறிஸ்துவின் பிறந்த நாள் வரை, மரியின் உடலும் மாபரன் கிறிஸ்துவின் உடலும் ஈருயிர் ஒருடலாய் இருந்தன.

இவ்வாறு மரியிடமிருந்து உதித்த இயேசுவின் உடல் உயிர்ப்பின் மகிமையடைந்து விண்ணக மாட்சியில் வீற்றிருக்கும்போது, இங்கு மரியாளின் உடல் மட்டும் கல்லறையில் கறையான்களால் அரிக்கப்படுமா என்ன? இறைமகன் இயேசுவிற்கு தம் வாழ்வை அர்ப்பணித்து புனித வாழ்கை வாழ்ந்த புனிதர்களின் உடலையே அழியாது காத்து பெருமைப் படுத்திய இறைவன், இறைமகன் இயேசுவையே தம் கருவில் சுமந்த மரியாளின் உடல் மட்டும் கல்லறையில் கறையான்களால் அரிக்கப்படுமா என்ன?

பழைய ஏவாளால் உலகில் நுழைந்தது சாவு. புதிய ஏவாள் மரியாளால் உலகில் நுழைந்தது வாழ்வு. இறைவனின் தாய் என்ற சிறப்புடன் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் மையத்திலிருந்து எபேசு நகரிலும் உரோமையிலும் நம் அன்னைக்கு ஆலயங்கள் உள்ளன. கி. பி 370 லேயே அந்தியோக் நகரில் என்றும் கன்னியான தேவனின் தாய்குரிய சிறப்புத் திருவழிபாடுகள் நடைமுறையில் இருந்து வந்துள்ளன. அப்பொழுதெல்லாம் 'மரியாவின் வானகப்பிறப்பு என்ற தலைப்பில் மட்டுமே நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. மெல்ல மெல்ல இவ்விழாவிற்குப் பிறந்தநாள்' 'துயில் கொள்ளல்' எனவும் 'சென்று விட்டார்' 'விண்ணேற்பு' எனவும் பெயர்கள் சூட்டப்பட்டன. எனவே மரியன்னை ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்று விசுவாச சத்தியமாக அறிவிக்கப்பட்டது.

**✠"அன்னை மரியாவை அதிகம் அன்பு செய்வது பற்றி ஒருபோதும் பயப்பட வேண்டாம். இயேசுவைவிட அதிகமாக நீங்கள் அவரை ஒருபோதும் அன்பு செய்ய முடியாது."✠**

# 2023 ல் நடைபெற்ற இலங்கை

சார்ட்







வயல் மாதாவில் நற்கருணை விழா









வானகத் தந்தையே! உமது இரக்கத்தினால் நாங்கள் எங்கள் குறைகளை அறிந்து,

# ஆன்மீகப் பணியகத்தின் பதிவுகள்









, அவைகளைக் களைந்து, உமது மக்களை உமது அரசில் சேர்க்க வரம்அருளும்..

# 22-07-2023 அன்று இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் சலேத் மாதா திருயாத்திரை









22.07.2023 திருப்பலி, La Salette



22.07.2023 திருப்பலி, La Salette









# உடலை வலுவூட்டக்கூடிய 3 வகை களி!

நமது பழந்தமிழரின் உணவில் மிக முக்கியமானது களி. பல்வேறு வகையான களிகளை நம் மக்கள் உண்டு வந்தார்கள். நீண்ட நேர பசியைத் தாங்குவதற்கும், உடலை உரமாக்கவும் களி சிறந்த உணவு.

இப்போதைய தலைமுறையில் பலர் களி வகைகளை வீட்டில் செய்வது கிடையாது. ஆனால் ஆரோக்கிய வாழ்வை நாடும் மக்கள் மீண்டும் பழந்தமிழர் உணவுமுறையை மீட்டெடுக்க விரும்புகிறார்கள். சிறுதானிய உணவு வகைகளையும், களி வகைகளையும் பலர் பரிமாற ஆரம்பித்திருக்கிறார்கள்.

மூன்று முக்கியமான களி வகைகளை பற்றி இங்கே பார்ப்போம்:

## 1. கேப்பைக்களி : –




ராகி களி, கேப்பைக் களி, கேழ்வரகுக் களி என வெவ்வேறு பெயரில் மக்கள் இதனை அழைக்கிறார்கள். இந்தக் களியை எளிதாக செய்யலாம். முதலில் ராகியை நன்றாக அரைத்து ராகி மாவைத் தயார் செய்து கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி நன்றாக கொதிக்க விட வேண்டும். ராகி மாவை, கொதி நீரில் போட்டு நன்றாகக் கிளற வேண்டும். பின்னர் உருண்டை வடிவில் வார்த்து எடுத்துச் சாப்பிடலாம். கேப்பைக் களியைப் பொறுத்தவரையில் அதனுடன் வெல்லம், கருப்பட்டி, தேங்காய் போன்றவற்றைச் சேர்த்துச் சாப்பிடலாம்.

### பலன்கள் : –

கால்சியம் மிகவும் அதிகம் என்பதால், வளரும் குழந்தைகள், விளையாட்டு வீரர்கள், பெண்கள், தாய்மார்களுக்கு ஏற்ற உணவு இது. கேழ்வரகு, பசியைக் குறைக்கும் ஆற்றல் கொண்டது.

உடல் வெப்பத்தைத் தணிக்கும் ஆற்றல் கொண்டது. கோடையில் அனைவருமே காலை அல்லது மதிய உணவாக எடுத்து கொள்ளலாம். வைட்டமின்கள், தாதுஉப்புகள் நிறைந்தது. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். குடல் புண்களை ஆற்றும்.

## 2. உளுத்தங்களி : –

தேவையானவை :–

–நன்கு அரைத்த உளுத்தம் பருப்பு மாவு – ஆறு கைப்பிடி

–கருப்பட்டி அல்லது வெல்லம் – தேவையான அளவு

–தேங்காய் துருவியது

–நல்லெண்ணெய் – நான்கு ஸ்பூன்

–அரிசிமாவு – சிறிதளவு

–ஏலக்காய் – நான்கு கிராம்

–வறுத்த பாசி பருப்பு – சிறிதளவு




### செய்முறை : –

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அரிசிமாவு, வறுத்த பாசிப்பருப்பு மாவு ஆகியவற்றைச் சேர்த்து கலக்கவும் . பின்னர் கொதிக்க வைத்து, அதனுடன் கருப்பட்டி அல்லது வெல்லத்துடன் எண்ணெய் ஊற்றி நன்றாகக் கிண்டவும். பின்னர் உளுந்து மாவைப் போட்டு நன்றாக கிண்டவும். ஏலக்காய், தேங்காய் துருவல் ஆகியவற்றை சேர்த்து கிளறி பரிமாறவும்.

### பலன்கள் :–

உளுத்தங்களியில் கார்ப்போஹைட்ரேட், பொட்டாசியம், கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் மற்றும் தாது உப்புகள் உள்ளிட்டவை அடங்கியுள்ளன. இடுப்பு எலும்பு வலுவாகும். பூப்பெய்தும் பெண்கள், கர்ப்பிணிகள், விளையாட்டு வீரர்கள் போன்றோருக்கு மிகவும் ஏற்றது. உடல் எடையைக் கூட்ட விரும்புபவர்கள் வாரம் இரு முறையாவது இதைச் செய்து சாப்பிடுவது பலன் அளிக்கும்.

## 3. வெந்தயக்களி :–




தேவையானவை:

புழுங்கல் அரிசி – 300 கிராம்

உளுந்தம் பருப்பு – 50 கிராம்

வெந்தயம் – 50 கிராம்

நல்லெண்ணெய் – தேவையான அளவு

நாட்டுச் சர்க்கரை – 300 கிராம்

### செய்முறை :–

புழுங்கல் அரிசியை இரவே ஊறவைத்து நன்றாக மாவாக அரைத்துக் கொள்ளுங்கள். உளுத்தம் பருப்புடன், வெந்தயம் சேர்த்து, தனியாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் புழுங்கல் அரிசி மாவுடன், உளுந்து மாவைக் கலக்கவும். தோசை மாவு பதத்திற்கு நன்றாகக் கலந்த பிறகு ஒரு சட்டியில் எண்ணெய் ஊற்றி, கரண்டியால் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். களி போல நன்றாகத் திரண்டு வரும்போது நாட்டுச் சர்க்கரையைச் சேர்த்துக் கலக்க வேண்டும். பாத்திரத்தில் கிண்டும் போது நடுவே கட்டிகள் வராத அளவுக்கு கிண்ட வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். பின்னர் உருண்டைகளாக உருட்டிச் சாப்பிடலாம்.

### பலன்கள் :–

கிராமத்தில் வயதானவர்களுக்கு தரப்படும் முக்கியமான உணவு வெந்தயக்களி. இதில் அத்தனை சத்துக்களும் இருக்கிறது. உடலை வலுவூட்டும். உடல் குளுமை அடையும், செரிமானம் சீராகும், வயிற்றுப்புண், வாய்ப்புண் இருந்தால் குணம் கிடைக்கும்.


## வார்த்தை வாழ்வாக

**நாம் புதிதாய் தொடங்கும் எந்த ஆக்கமான செயலுக்கும் தடைகள் இருக்கத்தான் செய்யும். இனம்புரியாத பயம் இருக்கும். இது இயற்கை. ஆனால் இயேசு இந்த உலகை மீட்க ஒரு புதிய அற்புதக் கருத்தை உருவாக்கினார். புரையோடிப் போன சாதிவெறி, சுரண்டல், சுயமைத்தனம், பிரிவினைகள், சூழ்ச்சிகள் போன்ற மனித இனத்தை அழிக்கும் சக்திகளுக்கு மாற்றுச் சக்தியாகப் பரிவு, இரக்கம், அன்பு, தியாகம் ஆகிய மதிப்பீடுகளை மக்களிடையே உணரச்செய்து அவருடைய உணர்வுகளுக்கு அடித்தளமிட்டார். அவருடைய வார்த்தைகளைச் சுமந்து செல்லும் தூதர்களுக்கு எதிர் கொள்ளபோகும் சோதனைகளை எப்படி எதிர்த்த வெற்றிக்கான வழி–முறைகளை எடுத்துக் கூறுகின்றார். எல்லாசெயல்களுக்கும் தம் தந்தையை துணை இருப்பார் என்ற இலக்கை நமக்குள் பதிக்கின்றார். நாமும் புயலெனப் புறப்படுவோமா?**

## அசாத்திய ஆற்றலோடு விளங்கிய 10 புனிதர்களில்

### 3வது புனிதர்

Saint Pio of Pietrelcina



அசாத்திய ஆற்றல் பெற்ற புனிதர்களில் மூன்றாவதாக வருபவர் ஐந்து காயம் வரம் பெற்ற அருட்பணியாளர் புனித பியோ. **(Power of Stigmata)**

இயேசு பாடுகளின் போது தனது கைகள், கால்கள், மார்பில் பெற்ற ஐந்து காயங்களை தனது கைகள், கால்கள், மற்றும் விலாவில் பெற்றுக்கொண்டு வேதனைகளையும், பாடுகளையும் அனுபவித்தவர் புனித பியோ. யேசுவின் பாடுகளை உடலில் பெற்றுக்கொள்வது பெருமைக்குரிய ஒன்றாக இருந்தாலும் பாடுகளும் ரணமும் நிறைந்தது. தலை வெள்ளிக்கிழமை தோறும் இடைவிடாது உபாதைகள் அனுபவிப்பார். இரத்தம் காயங்களிலிருந்து வெளியேறிக்கொண்டே இருக்கும். திருப்பலி நிறைவேற்றும் போது இவருடைய உடலில் இருந்து வெளிவரும் இரத்தம் திருப்பலியில் பங்கெடுப்போர்க்கு அற்புதமான நறுமணத்தைத் தரும். அறிவியல் ஆய்வுகள் இவரின் உடலில் ஏற்பட்ட ஐந்து காயங்களை பொய்யென்று நிரூபிக்க முயற்சி செய்து முடியாமல் வெட்கி நின்றது. புனித பியோ மறைந்ததும் அவரது ஐந்து காயங்களும் திடீரென மறைந்து போய்விட்டது.

பியட்ரல்சினா புனித பியோ (25 மே 1887 – 23 செப்டம்பர் 1968) கப்புச்சின் **(Order of Friars Minor Capuchin)** துறவற சபையின் குருவும், கத்தோலிக்க திருச்சபையின் புனிதரும் ஆவார். இவரது திருமுழுக்கு பெயர் பிரான்செஸ்கோ, போர்ஜியொன், கப்புச்சின் சபையில் இணைந்தபோது பியோ என்ற பெயரை ஏற்றுக்கொண்டார். குருவானது முதல் பாத்ரே பியோ என்னும் பெயரில் பொதுவாக அறியப்படுகிறார். இவர் தனது உடலில் பெற்ற இயேசுவின் ஐந்து திருக்காயங்கள் இவரை உலகறியச் செய்தன. 2002 ஜூன் 16 அன்று, திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார்.

## சிரி....சிரி.....சிரி....



**அம்மா:** மகனே உனக்கொரு பெண் பார்த்துள்ளேன் மணந்தால் அவளை மணக்க வேண்டும்

**மகன்:** ஹாஹாஹாஹா

**அம்மா:** டே இருடா இன்னும் ஜோக்கே சொல்லலடா அவள் முத்து முத்தாக சிரிக்கிறாள் மூக்கும் முழியுமா. இருக்கிறாள்

**மகன்.** முடியாதம்மா முடியாது. நீ எனக்கு பார்த்த பெண்ணு மூக்கும் முழியுமா இருக்கிறாள் நான் எனக்கு பார்த்த பெண்ணு வாயும் வயிறுமா இருக்கிறாள்......

## சிரிக்கலாம் வாங்க

நானும் என் நண்பனும் பாரில் ஓடர் செய்து விட்டுக் காத்திருந்தோம். அப்போது அருகில் ஒருவர் போனில் பேசிக்கொண்டிருந்தார். ஸ்பீக்கர் ஒனில் இருந்ததால் மறுமுனையில் பேசிய அவர் மனைவியின் குரல் தெளிவாகக் கேட்டது. " ஏங்க நான் இப்ப சொப்பிங் மால் உள்ளே இருக்கிறேன். நான் சொன்னேனே டி ஜிட்டல் கமரா இங்கு இருக்குங்க. இருபதாயிரம்தான் விலை வாங்கிடட்டுமா? வாங்கிக்க! அப்புறம் நான் கேட்டேனே ஒரு வைர நெக்லஸ், அதுவும் இங்க இருக்கிங்க விலைதான் ஒண்ணரை இலட்சம் சொல்றான்." ஒண்ணரை இலட்சம்தானே உனக்கு பிடிச்சிருந்தா வாங்கிக்க. அப்புறம் ஒரு புடவை பார்த்தேன் ரொம்ப காஸ்ட்லியா சொல்றான். ரேட்டா பார்க்காதம்மா உனக்கு பிடிச்சிருந்தா வாங்கிக்கமா. ஏங்க அப்புறம் நாம பார்த்தோமே ஒரு கார் இப்ப ஆர்பர் போட்டிருக்காங்க, விலை பதினெட்டு இலட்சம் சொல்றான், உங்க செக் இருக்கு குடுத்திடவா? ஓகேம்மா இதெல்லாம் கேக்கலாமா, உனக்கு பிடிச்சிருந்தா போதும். ஓகேங்க சீக்கிரம் வீட்டுக்கு வாங்கன்னு கொஞ்சலாய் சொல்லிவிட்டு மறுமுனையில் போனை வைத்தாள் மனைவி. இவரும் போனை சிரித்தபடியே வைத்துவிட்டுத் திரும்பினார். ஒரே நாளில் இவ்வளவு பேர்ச்சஸா நாங்கள் மிரண்டு போய் பார்த்துக்கொண்டிருக்க எங்களைப் பார்த்து சிரித்தபடியே கேட்டாரே ஒரு கேள்வி.

**" யாரோட மோபைல்ங்க இது?"**

10ம் பக்க தொடர்

புனித பிரான்சிஸ் சலேசியார் கூறுவார்: "வலிமை வாய்ந்தோர் (புனித வாழ்வு நடத்துவோர்) வலிமை இழக்காமல் இருக்கவும். வலிமையற்றோர் (ஆன்ம வாழ்வில் பலவீனர்கள்) வலிமை பெறவும் அடிக்கடி நற்கருணை உட்கொள்ள வேண்டும்". இறைவாக்கினர் எலியாவுக்கும் உணவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நற்கருணைக்கு முன்னோடி நிகழ்வுகள் அவை. கடவுளே நேரடியாக இருமுறை எலியாவுக்கு உணவளிக்கிறார்.

யோர்தானுக்கு அப்பால் கெரீத்து என்ற ஓடைக்கருகில் காகங்கள் வழியாக அப்பமும் இறைச்சியும் (1 அர. 17:6).

சூரைச் செடியின் கீழ் தளர்ந்து படுத்திருந்த போது வான தூதர் வழியாக அப்பமும் தண்ணீரும் (1 அர. 19:7–8).

எலியா தாமே வல்லமையோடு உணவு வழங்குவது இருமுறை.

சாரிபாத் கைம்பெண்ணின் வீட்டில் அள்ள அள்ள அமுத சுரபி போல (1 அர. 17:14). குகைகளில் தங்க வைக்கப்பட்ட இறைவாக்கினர் நூறு பேருக்கு (1 அர. 18:4).

பயணத்தின் இலக்கும் இயேசுவே. பயணத்தில் வழி நடத்துபவரும் அவரே. வலிமையாக இருப்பவரும் அவரே.

அருட்பணி இ. லூர்துராஜ்

# பிரான்சுக்கு வருகை தரும் பாப்பரசர்



வரும் செப்டம்பர் மாதத்தில் பாப்பரசர் பிரான்சுக்கு வருகை தர உள்ளார். **Marseille** நகரில் இடம்பெறும் மிகப்பெரிய ஒன்று கூடல் ஒன்றில் அவர் கலந்து கொள்ள உள்ளார். செப்டம்பர் 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் அவர் பிரான்சுக்கு வருகை தருவார் என நேற்று சனிக்கிழமை வாட்டிகன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைநகர் பரிசுக்கு வருகை தராமல், நேரடியாக மார்செ விமான நிலையத்துக்கு வருகை தர உள்ளார். அவரை வரவேற்பதற்காக ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் மார்செ விமான நிலையத்துக்குச் செல்கிறார். ஜனாதிபதியுடனான சந்திப்பு நிறைவடைந்ததும், **Notre-Dame de la Garde** தேவாலயத்தில் மாபெரும் தொழுகை ஒன்றில் கலந்துகொள்கிறார். பின்னர் மறுநாள் 23 ஆம் திகதி ஐரோப்பாவின் பல பகுதிகளில் இருந்து வருகை தரும் கிறிஸ்தவ திருத்தந்தைகளுடனான சந்திப்பு ஒன்றில் அவர் கலந்துகொள்கிறார்.

# ஈழத்தின் கத்தோலிக்க செய்திகள்



முள்ளிவாய்க்கால் மண்ணில் திருத்தந்தையின் திருத்தூது பிரதிநிதி பேரருட்திரு பிராயன் உடக்வே ஆண்டகை படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு ஆஞ்சலி செலுத்தினார்.




# இளையோரும் எதிர்காலக் கனவுகளும்!

வேதியர் பேரா. தீ. ம. சந்திராகு வேங்கீடக்குளம், இந்தியா

## கனவுகள் பொதுவுடமை, காட்சிகள் தனியுடைமை!

முத்துச்சாமிக்கு முப்பது வயது. முட்டை வியாபாரி. தலைச் சுமையாக நல்ல கூடைகளில் தரமிக்க முட்டைகளை அடுக்கிக்கொண்டு சிற்றூர்– நகரம் எனப்பாராமல் தெருக்களுக்குக் கால் நடையாகவே போய் விற்பனை செய்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டு தனது வயது முதிர்ந்த பெற்றோரையும், உடல் ஊனமுற்ற (மாற்றுத் திறனாளிகள்) இரு தங்கைகளையும் கொண்ட குடும்பத்தை வழிநடத்தி வந்தான்.

அன்று நல்ல வெயில். பல இடங்களுக்குச் சென்று பாதி முட்டைகள் விற்றுவிட்ட நிலையில் மீதி முட்டைகளை ஒரு சிறு கூடையில் சுமந்த வண்ணம் நடந்து வந்தான். களைப்பு மேலிடவே, ஒரு குளத்தங்கரையில் இருந்த ஆலமர நிழலில் தனது துண்டை விரித்து தூங்கினான்.

அவனது எதிர்கால வாழ்வு படம்போல் ஓடத்தொடங்கியது. முட்டைகள் விற்ற பணத்தில் கோழிகள் வாங்கினான். அவை வெகுவாகப் பெருகின. அவற்றை நல்ல இலாபத்திற்கு விற்று விலை உயர்ந்த பசுமாட்டுப் பண்ணை வைத்தான். இப்படியாக பல இலட்சம் ரூபாய்கள் சேர்ந்தன. அழகான மாடி வீடு கட்டினான். கோடிஸ்வரரின் மகள் பேரழகி கோமளவல்லியை மணமுடித்தான். மங்களகரமான மகிழ்ச்சியான வாழ்க்கை. தங்க மகன் பிறந்தான். அவனுக்கு தனபால் எனப் பெயரிடப்பட்டது. ஒரு நாள் குழந்தை கதறியது. விடாமல் அழுது கொண்டே இருந்தது. கோமளவல்லி குழந்தையைக் கவனிக்கவில்லை. மனைவிமேல் பயங்கரக் கோபம். அவளைக் கால்களால் ஓங்கி ஒரு உதை விட்டான். உண்மையாகவே கால் பக்கம் இருந்த முட்டைகள் எல்லாம் உடைந்து போய் குளத்துத் தண்ணீரில் மூழ்கி விட்டன.

முத்துச்சாமி விழித்துக்கொண்டு முட்டைக் கூடையைத் தேடினான். அது குளத்துத் தண்ணீரில் கவிழ்ந்து கிடந்தது. வாழ்க்கை வானளாவ உயர்ந்த கனவில் உதைத்த உதை அவனை ஒட்டாண்டி ஆக்கிவிட்டது. இது கதையல்ல உண்மை நிகழ்வு. இப்படிப்பட்ட கனவை நாம் இளையோருக்கு ஒப்பிடவில்லை. விழிப்போடும், விவேகத்தோடும் எதிர்கால வாழ்க்கை பற்றிய எதிர் நோக்குக் கனவுகளையே நாம் இங்கே குறிப்பிட விரும்புகின்றோம். கனவுகள் எல்லாமே பொதுவுடமை தான். அவற்றைப் பலர் கையாளும் திறத்தில் வெளிப்படும் காட்சிகள்தாம் அவரவரது இலக்கு, செயல்திறன் மற்றும் எதிர்கொள்ளும் அணுகுமுறை ஆகியவற்றைப் பொறுத்து வெற்றுக்கனவுகளாகவோ, வெற்றிக் கனவுகளாகவோ வெளிப்படும்.

## கனவுக்கான அழைப்புக்கள் காலத்தின் அவசியங்கள்

பாலர் வகுப்பில் உள்ள ஒரு குழந்தையிடம் நீ எதிர்காலத்தில் என்ன வேலை செய்ய போகிறாய் என்றால், அது மிக உயர்ந்த தரத்துடன் கூடிய ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ் படிப்புக்களை சுட்டிக்காட்டி ஆட்சிப்பணி, உயர்நிலை காவல்துறை ஆகியவற்றைத் தன் விருப்பமாகக் கூறும். அதே குழந்தையிடம் நடுநிலைப்பள்ளி முடிவில் (8ம் வகுப்பு) அதே கேள்வியைக் கேட்டால் சற்று தரம் குறைந்த பணிகளை பொறியியளாளர், வழக்கறிஞர், மருத்துவர் போன்று உள்ளவற்றைக் கூறும். அதே குழந்தை மேல்நிலை இறுதி வகுப்பு படித்து முடிக்கும்போது......

அதைப் பற்றியே நான் இன்னும் முடிவு செய்யவில்லை. பெற்றோர் உளறிக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் ஏதாவது ஒன்றில் தள்ளிவிடுவார்கள் எனக் கூறும். அக்குழந்தைக்கு ஊட்டி வளர்க்கப்படவில்லை என்பதே உண்மை நிலை. அதே வேளையில் இறையழைத்தல் ஆர்வத்தால் திருப்பட்ட நிலை (குருத்துவம்) துறவியர் நிலை (அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள்) ஆகிய இலக்குகள் குடும்பச் சூழல் காரணமாக பிழைத்துப் போவதோ, நீர்த்துப்போவதோ இயல்பு. அதுபற்றி விமர்சிக்கவோ, கவலையடையவோ தேவையில்லை. ஆனால் வயது வந்த நிலையில் வளரும் இளம் பருவத்தில் நிச்சயம் கனவு கண்டே ஆக வேண்டும். அது காலத்தின் கட்டாயம் என்பது நிதர்சன உண்மை.

## சலவை கலையாத பணிக்கான நோக்கா (White colours job)

இந்த 21ம் நூற்றாண்டில் பெரும்பான்மையோர் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து ஒவ்வொரு நாளும் காணும் வருமானத்தில் வாழ்க்கையை நடத்தும் நிலையை விரும்புவது என்பது பெரும்பாலும் நடைமுறையில் காண முடியாத சூழல். இந்த எதார்த்த கண்ணோட்டத்தில் சலவை கலையாத உடைகளுடன் தோன்றும் பணியைத் தேர்வு செய்தல் பிழையான கருத்து இல்லவே இல்லை. ஆனால் அதற்காக அடிப்படை ஆதாரமான குடும்பப் பொருளாதாரத்தை அதிகமாக இழப்பதும், அதற்காக சில, பல வருடங்களை எந்த வேலையும் இல்லாமல் காத்திருப்பு படலத்தில் காலத்தை வீணாக்குவதும் விவேகமான செயல்பாடாக இருக்க முடியாது.

**கனவின் பிறப்பிடம் தூக்கம் அன்று**

பலர் 'தூக்கம் இருந்தால் தானே கனவு வரும். சில இளையோருக்குத் தூக்கமே வருவதில்லையே. அவர்களுக்கு எப்படி கனவு வரும்?' என்கின்றனர். இளையோருக்கு வர வேண்டிய கனவு, தூக்கத்திலிருந்தல்ல மாறாக அவர்கள் தூங்காமலே கனவு காண வேண்டும். அதற்காகச் செயற்கையாகத் தூக்கத் தடுப்பு நடைமுறைகள் அல்ல. இளையோர் கனவு காண வேண்டிய சூழல்களாக உளவியல் கருத்தியலாளர்கள் கீழ்க்கண்ட சூழல்களைப் பரிந்துரைக்கின்றனர்..

**நல்ல உடல்நலம்** – உடல்நலக் கோளாறு உள்ளவர்களால் எதிர் காலத்தை வளப்படுத்தும் கனவுகளை உருவாக்க இயலாது.

**பரந்துபட்ட பார்வை** – விருப்பு வெறுப்பின்றி தன்னையும் சுற்றுப்புறத்தையும் பார்க்க வேண்டும். அதற்கான குறுக்கீடுகள் எந்த வடிவில் வந்தாலும் அவற்றை முன்மதியோடு களைந்திடல் வேண்டும்.

**தேவை உணர்தல்** – நான் காணும் இடங்களில் அவசர அவசியத் தேவைகளாக அறியக் கூடியவைகளாக எவை உள்ளன? அத் தேவைகள் அங்கே உருவாகி உலாவி வரக் காரணிகள் யாவை? என கண்டுபிடித்தல்.

**தெளிந்த சிந்தனை** – பார்ப்பதையெல்லாம் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற இளமைத் துடிப்புக்கு அணைபோட்டு எந்தக் கால வரையறைக்குள் எவற்றை? எப்போது? எப்படி? எங்கே? செயல்படுத்திப் பயன் காணுவது என்று சிந்திப்பது.

**ஆன்றோரை நயத்தல்** – தாம் கண்டுணர்ந்த தேவைகளைத் தரம் பிரித்து முன்னுரிமை அடிப்படையில் தனக்கு, தன் குடும்பத்துக்கு, தான் வாழும் சமுதாயத்துக்கு பயன்படும் வகையில் செயலாக்கம் செய்வது என நயமிகு நூல்கள் வழியாகவோ ஆன்றோர் துணைகொண்டோ அறிந்துகொள்தல் அவசியம்.

**செயல் திட்டம் வகுத்தல்** – எந்தச் செய்பாட்டு வெற்றிக்கும் இனிய திட்டமிடல் அடிப்படைக் கூறாகும். இளையோர் தூங்காப் பொழுதுகளில் தாங்கள் ஆற்ற வேண்டிய செயல்பாடுகளாக உணர்ந்தவற்றை ஏற்ற முறையில் நடைமுறைப்படுத்த உதவும் திட்டமிடுதலுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இங்கேதான் இளையோருக்கு மிகுந்த விழிப்புணர்வு தேவை. பெற்றோர் கட்டிக்காக்கும் பொருளாதாரம் பாழ்படாமல் ஒத்த சிந்தனை கொண்ட இளையோரை ஒருங்கிணைத்து போதிய பொருளாதார வசதியுடன் தனது செயல்பாட்டால் விளைவது தனி மனித மேம்பாடா வெகுசன மேம்பாடா, குழுவின் மேம்பாடா என்பதை மனத்தில் வைத்து திட்டமிடல் அவசியம்.

**மறு மதிப்பீடும்** – ஒரு செயலை முழுமையாக்குவது ஒவ்வொரு நகர்தலும் மதிப்பீடு செய்வதும் அது முடிந்த பிறகு மறு மதிப்பீடு செய்வதும் ஆகும் என்பதை உணர்தல்

**இறைவேண்டல்** – இறை வேண்டலால் முடியாதது எதுவுமில்லை என்பதை உணர்ந்து தொடர் இறை வேண்டல் செய்வது. ஆகியவை எல்லாமே தூங்கும் போது வருகின்ற கனவுகளால் உருவாகுபவைதான். கனவுகளைக் காரியங்களாக்க கவனிக்க வேண்டியவை

**அ) தனி மனித வழிபாட்டைத் தளர்த்தல் (Hero worship)**

நேரம், நினைவு , பொருள் ஆகியவற்றை முழுமையாகக் கொடுத்து கண்ட கனவு ஏதோ ஒரு தனி மனிதனை வழி–படவோ, அவர் புகழ் பாடவோ அன்று, என்பதை நன்கு உணர வேண்டும்.

**ஆ) சோதிடம் பார்த்தல் தவறு**

சிலர் தாங்கள் தொடங்க இருக்கும் எச் செயலுக்கும் நாள், சகுணம், பொருத்தம், சோதிடம் பார்க்கும் வழக்கம் உடையவர்களாக உள்ளனர். இளையோர் இந்தப் போக்கைக் கடைப்பிடித்தலாகாது. இப்படி எல்லாம் பார்த்துத் தொடங்கிய பல திட்டங்கள் முடங்கிவிடுவது கண்கூடு.

**இ) ஊடகப் பயன்பாடு**

தமது திட்டங்களைச் செயல்படுத்த அறிவியலின் உச்சங்களை நன்கு புரிந்து உணர்ந்து பயன்படுத்த வேண்டும்.

**ஈ) பெயர் சொல்லும் பெரும்பயன்**

இன்னார் தொடங்கிய இச் செயல்பாடு இவ்வளவு பயனுள்ளதாக உள்ளது என, வெகுசனம் பெயர் சொல்லும் அளவுக்கு செயல்பாடு அமைதல் வேண்டும்.

**உ) கனவுகள் கலையாதவாறு**

ஒரு திட்டத்திற்கு உளமே இன்னொன்றைத் திணித்தால் எதுவுமே ஈடேறமாட்டா. கனவுகள் கலைந்துவிடும். கவனம் தேவை.

**ஊ) தொலை நோக்குப் பார்வை**

இப்போதுள்ள பிரச்சினைக்கு இது போதும் என்று கனவு–களைப் பிரச்சினையின் தீர்வுகளாக அமைக்காமல் தொலை நோக்குப் பார்வையுடன் அமைப்பது நல்லது.

இனிய இளையோரே! புதிய சமுதாயம் படைக்கப் புறப்படும் இளையோரே! உங்களுக்குப் பயனுள்ள கனவுகள் உதிக்கவும், அவற்றைச் செயல்படுத்தும் ஒத்துழைப்புப் பெருகவும், அவற்றின் பயன்கள் நீடித்திருக்கவும் நல்வாழ்த்துக்கள்.






# நிமிர்ந்த பதர்கள்

அருட்பணி. ஜெயசீலன் சவேரியார் பிச்சை ச.ச.

பரந்து விரிந்த கோதுமை வயல். கிட்டத்தட்ட அனைத்து கதிர்களும் கிளைகளோடு தரையை நோக்கி வளைந்தன. ஒரு சில கதிர்கள் மட்டுமே தண்டுகளை நேராக வைத்துக்கொண்டு வானத்தையும் வழிப்போக்கர்களையும் அவர்களது தோழர்களையும் தோற்றத்தில் தெரிந்தவர்களையும் நிமிர்ந்த தலைகளோடு நீங்காமல் பார்த்துக்கொண்டிருந்தன. நாங்கள் தான் சிறந்தவர்கள்! எதற்கும் வளைந்தவர்கள் அல்ல! என்று வான் கிழிய சத்தமிட்டன. நாங்கள் அடிமைகளைப் போல தண்டுகளை வளைத்து வாழ்பவர்களும் அல்ல, கூனிய முதுகோடு கும்பிடு போட்டு வாழ்வை கடத்துபவர்களும் அல்ல. நிமிர்ந்த உடல் மலர்ந்த முகம் வான்நோக்கிய வளர்ச்சி இவைகளே எங்களது தாரக மந்திரம்.

**உனக்கான இடத்தை தேடுவதல்ல வாழ்க்கை... உனக்கான ஏற்ற உலகத்தை உருவாக்குவதே வாழ்க்கை...!**



உண்மையாகவே இங்கு நடக்கும் நிகழ்வுகள் மற்றும் சூழல்கள் அனைத்திலும் ஆதிக்கம் செலுத்துபவர்கள் எல்லா கோதுமை கதிர்களுக்கும் தலையாய எடுத்துக்காட்டு நாங்களே என்று தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கும் வேளையில், ஒரு பலமான காற்று வீச நிமிர்ந்து நின்ற கதிர்கள் பந்தாடப்பட்டு அக்கம் பக்கம் தெரியாமல் பறந்தடிக்கப்பட்டன. தரையை நோக்கி வளைந்த கதிர்களோ தனது முதிர்ந்து விளைந்த கதிர்களால் பாதுகாக்கப்பட்டு, பலம் சேர்க்கப்பட்டு, பக்குவத்தால் தனது மௌனச் சிரிப்பால் காற்றை வென்றது. இறுதியில் வாழ்க்கையை நன்கு அறிந்த காற்று, ஆணவத்தால் உரக்க பேசிய நிமிர்ந்து நின்ற கதிர்களைக் கேலி செய்தது: "அவர்கள் நிமிர்ந்து நின்றது நிச்சயம்தான், ஆனால் காலியான வெற்றுப் பதர்களாக இருந்ததாரகள் என்பதை மறந்தவர்களாக! இங்கு நிமிர்ந்த பதர்களைவிட வளைந்த கதிர்கள் உயர்ந்ததே என்ற உண்மை உரக்கச் சொல்லப்படுகிறது.

ஓங்கி ஒலிக்கும் குரல்தான் பலம் வாய்ந்தது என்று நினைக்கும் நிழல் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இன்றைய ஊடகங்களும் இதற்கு ஊக்கம் அளிப்பது கவலை. பொய்மைக்கு கிடைக்கும் வரவேற்பு மெய்மைக்கு கிடைப்பதில்லை. பலத்த ஆதரவுகளால் பொய்ச்சொற்களுக்கு உண்மை சாயம் பூசப்படும் சங்கடங்களும் ஏராளம். ஏனென்றால் பொய்மையின் குரல் ஓங்கி ஒலிக்கும் போராட்ட காலமிது. ஓங்கி ஒலிப்பதால் மட்டுமே அதன் ஆட்சி வலுக்கிறது என்றால், அது அறமில்லா ஆட்சி என்பதில் ஐயமில்லை. ஒரு பொய்யை பலமுறை சொல்வதாலும், அதையே அழுத்தமாக உரக்க சொல்வதாலும், அதை உண்மையாக்க முடியும் என்று பலமுயற்சிகளும் இங்குண்டு. கண்டுபிடித்துவிடுவார்களோ! என்று நினைத்து ஆவேசமாக வார்த்தைகளை அடுக்கிக் கொண்டுபோகும் அரைவேக்காடு மனிதர்கள் கூட்டம் வளர்ந்து கொண்டிருப்பதை கண்கூடாகப் பார்க்கின்றோம். உண்மையை மறுப்பவர்கள் அமைதிக்கு எதிரியே. பலவேளைகளில் அமைதியாக. இருப்பவர்கள் அறியாமையால் அல்ல, மாறாக அனுபவத்தால் என்ற மனப்பக்குவமின்மை வேடிக்கையே.

அமைதி என்பது கோழைத்தனமும் அல்ல, உரக்கப் பேசுதல் வீரமுமல்ல. அமைதி பலவேளைகளில் நிதானத்தையும், நிம்மதியையும், நீட்சியையும் குறிக்கும். உரக்கப் பேசுதல் பலவேளைகளில் பயத்தையும், பாவத்தையும், பாசாங்கையும் சுட்டிக்காட்டும். சிறுவயதிலே எனது ஊரில் காட்சிப்படுத்தப்பட்ட திரைப்படம் ஒன்றை பார்த்துக்கொண்டிருந்தேன். தூக்கத்தின் பிடியில் இருந்ததால் பாதியிலே எழுந்து வீட்டிற்கு சென்றுவிட்டேன். தன்னந்தனியாக வரும் வழியில் இருட்டின் பிடியில் சிக்கிக்கொண்டேன். மனதிற்குள் பாதாள பயம் ஆனால் வெளியில் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. வழிநீளம் "ராஜா, ராஜாதி ராஜனென்ற ராஜா" என்ற பாட்டை சத்தமாக பாடிக்கொண்டே வீடு வந்து சேர்ந்துவிட்டேன். மனதில் இருக்கும் பயம் வெளியே தெரியக்கூடாது என்று குரலின் வேகத்தையும் ஒலியின் ஓசையையும் உயர்த்தி உச்சரித்த அனுபவங்கள் பல நம் அனைவரின் வாழ்க்கையிலும் கண்டிப்பாக இருக்கும். மனதில் பயம் அதை மறைக்க உரத்த குரல். ஆனால் இது ஓசை மட்டுமே மனதின் ஆழ்குரல் இல்லை என்பதை நாம் அறிவோம். ஓசை அதிகமாக அதிகமாக உள்ளத்தில் வெற்றிடம் அதிகமாகிறது என்றால் அது மிகையாகாது.

பழுத்த அனுபவம் தேவையற்ற வார்த்தைகளை பேசுவதில்லை, உண்மையை மறைக்க குரலை உயர்த்துவதில்லை, பயத்தில் வார்த்தைகளை சரமாரியாக அள்ளி கொட்டுவதில்லை மாறாக, அமைதியை ஆடையாக அணிந்திருப்பார்கள். குறைந்த வார்த்தைகளில் நிறை உண்மைகள் வெளிப்படும் நிதானமே அவர்களின் குரல். பதர்கள் நிமிர்ந்திருக்கலாம், நிமிர்ந்திருப்பதால் பலரால் பார்க்கப்படலாம், அடையாளம் கண்டுகொள்ளப்படலாம் ஆனால் அவர்கள் நீட்சி அற்றவர்கள். விளைந்த கதிர்கள் வளைந்திருக்கலாம், ஆனால் நிதானத்தால் நீட்சியால் நிறைந்திருக்கிறார்கள் என்பதே உண்மை. ஆம்! உண்மைக் குரலுக்கு உரு கொடுப்போம் நம் மனக்குரல் உரக்கட்டும்

# புதிர் தோட்டம் 86

1) ஒன்று போனால் மற்றொன்று வாழாது அது என்ன?

2) இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?

3) எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவன் அவன் யார்?

4) வெள்ளை மணலுக்குள் தங்கம் அது என்ன?

5) ஒளி கொடுக்கும் ஆனால் விளக்கு அல்ல, சூடு கொடுக்கும் ஆனால் தீ அல்ல, பள பளக்கும் ஆனால் தங்கம் அல்ல அது என்ன?

6) கடல் நீரில் வளர்ந்து மழை நீரில் மடிவது அது என்ன?

7) இலையுண்டு கிளையில்லை, பூ உண்டு மணமில்லை, காய் உண்டு விதையில்லை, பட்டை உண்டு கட்டை இல்லை, கன்று உண்டு பசு இல்லை அது என்ன?

8) உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன்

9. வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை. அது என்ன?

10. காற்றைக் குடித்து, காற்றில் பறப்பான். அவன் யார்?

## புதிர் தோட்ட விடைகள் 85

1) ஜன்னல்
2) கரும்பு
3) உலக்கை
4) மீன் வலை
5) சூரியன், சந்திரன்
6) கண்ணாடி.
7) கனவு
8) Light House
9) கை விலங்கு
10) எறும்பு

## உறவுகள் 86க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1) அது கடவுளின் அரியனை.
2) மணவிலக்குச் சான்றிதழ்
3) அது கடவுளின் கால்மனை.
4) அது பேரரசரின் நகரம்.
5) மழை பெய்யச் செய்கின்றார்
6) மறு கன்னத்தை திருப்பி காட்ட வேண்டும்
7) கண், பல்லுக்குப்
8) முகம் கோணாதீர்.
9) அன்பு கூர வேண்டும்
10) இறைவனிடம் வேண்டுதல்.

# படித்ததில் பிடித்தது

1. **எ**திர் பார்ப்பதை விட எதிர் கொள்வதைக் கற்றுக் கொள்ளுங்கள்.

2. **பி**டித்ததோ பிடிக்கயையலயோ, வேண்டுமோ வேண்டாமோ சகித்துக் கொண்டு நாட்களைக் கடத்த சொல்லித் தருகிறது வாழ்க்கை

3. **ஆ**யிரம் உறவுகள் துணையாக இருந்தாலும் வாழ்வை தனியாகத் தான் எதிர்க்கொள்ள வேண்டும்.

4. **இ**ஷ்டபட்ட வாழ்க்கையை அமைத்து கொண்டால் கஷ்டங்களை வெளியில் சொல்ல கூடாது

5. **தூ**ய்மையான எண்ணங்கள், துணிச்சலான செயல்கள் இவ்விரண்டும் எப்போதும் இருப்பின் வாழ்க்கை சிறக்கும்

6. **பி**றர் பாரத்தை தாங்க கை கொடுத்தால், நம் பாரத்தின் கனம் தானே குறைந்துவிடும்

7. **க**வலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது. கலகலவெனும் சிரிப்பு ஓர் ஆணியை கழற்றுகிறது

8. **த**வறு கூடுதலாயிருந்தால் பிடிவாதமும் அதிகமாக இருக்கும்

9. **த**ன் கணவருக்கு துன்பம் வரும்போது மனம் பதையாத பெண்கள் அவர் மடியில் நெருப்பிற்கு ஒப்பாவர்

10. **த**வறான பதிலைக்காட்டிலும் மவுனம் சிறந்தது.

11. **எ**திரியைவிட நாக்கையே அதிகம் அடக்க வேண்டும். வெற்றிக்கான சாலையில் தொடர்ந்து வேலை நடந்து வரும்.

12. **க**னவு காண்பதுடன் காரியத்தில் இறங்குவதே சாதனைக்கான சாலை.

13. **சி**றந்தவையெல்லாம் நல்லவையல்ல. நல்லவையெல்லாம் சிறந்தவையே.

14. **த**ன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழி நடத்திச் செல்லும்.

15. **க**லங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்

16. **த**ன்னிடம் தானே நம்பிக்கை இழப்பது இறைவனிடம் நம்பிக்கை இழப்பதாகும்

17. **ஒ**வ்வொரு சாதனையும் மற்றவர்கள் முறியடிப்பதற்காகவே செய்யப்படுகின்றன.

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 80
## வெற்றியாளர்கள்



ரூத்து 1-4 - சாமுவேல் 1-14

**1ம் பரிசு:** திருமதி: கெலனா யோசவ்

**2ம் பரிசு:** திருமதி: மரிய செல்வநாயகம்

**3ம் பரிசு:** திருமதி: லடிஸ்லஸ் யோகமலர்

### ஏனையவர்கள்

1. திருமதி: நீற்றா செல்வரட்ணம்
2. திருமதி: றொபின் கூட் சகிலா
3. திருமதி சிறோமா டிலானி
4. திருமதி: அன்ரன் றஞ்சிதம்
5. திருமதி: மேரி ஜொய்சி
6. திருமதி: பிறிம்றோஸ் டலஸ்
7. திருமதி வில்பிறேட் ஜெஸ்மி மெற்றில்டா
8. செல்வி: யோசவ் சியாமளா
9. திரு: தேவசகாயம் அந்தோனிமுத்து
10. திரு: அருளப்பு கிறிஸ்ரியன்

## படித்ததில் பிடித்தது

நான்கு மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டு இருந்தன. மெலிதாய் காற்று வீசிக்கொண்டிருந்தது.! காற்றைக் கண்டதும்
**அமைதி** என்ற முதல் மெழுகுவர்த்தி, ஐயோ காற்று வீசுகின்றது, நான் அணைந்து விடுவேன் என்று பலவீனமாக சொன்னது. காற்று பட்டது அணைந்துவிட்டது.

**அன்பு** என்ற அடுத்த மெழுகுவர்த்தியும் காற்றை எதிர்க்க முடியாது என்று அணைந்துவிட்டது.

**அறிவு** என்ற மூன்றாவது மெழுகுவர்த்தியும் காற்றை எதிர்க்க முடியாமல் அணைந்துவிட்டது.

நான்காவது மெழுகுவர்த்தி மட்டும் காற்று வீசிய சில நொடிகள் போராடி ஜெயித்துவிட்டது. அப்போது அந்த அறையில் ஒரு சிறுவன் நுழைந்தான். ‘அடடா மூன்று மெழுகுவர்த்திகளும் அணைந்துவிட்டதே’ என்று கவலையுடன் சொன்னான். அதற்கு எரிந்துகொண்டிருந்த நான்காவது மெழுகுவர்த்தி சொன்னது. வருத்தப்படாதே நான் இருக்கின்றேன். என்னை வைத்து மற்ற மூன்றையும் பற்ற வைத்துக்கொள் என்றது. சிறுவன் உடனே நான்காவது மெழுகுவர்த்தியைப்பார்த்து “ உன் பெயர் என்ன?” என்று கேட்டான்? ‘ **நம்பிக்கை**’ என்றது அந்த மெழுகுவர்த்தி.

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி 80
## சரியான பதில்கள்

ரூத்து 1-4 சாமுவேல் 1-14

### இடமிருந்து வலம்

1) பலனை (ரூத்: 2:12)
4) நான் (1சாமு: 1:8)
6) பேழை (1சாமு: 4:22)
9) அங்கே (1சாமு: 7:17)
11) முழு (1சாமு: 7:9)
14) பொழுது (ரூத்:3:13)
17) நடை (ரூத்: 4:7)
18) வாதை (1சாமு: 6:4)
22) இன்று (1சாமு: 11:13)
23) சற்று (ரூத்: 4:1)
24) வயலில் (1சாமு: 6:18)
28) செல்ல (1சாமு: 14:4)
30) அடியாள் (1சாமு: 1:18)
32) ஊழியம் (1சாமு: 7:3)

### மேலிருந்து கீழ்

1)பரிவு (ரூத்:1:8)
2)அபி (1சாமு: 9:1)
3)இங்கே (1சாமு: 14:36)
7) ஏழு (1சாமு: 1:1)
8) வரை (1சாமு: 7:14)
9) அகன்று (1சாமு: 4:22)
12) நாடிச் (1சாமு: 9:9)
13) தருவான் (ரூத்: 4:15)
15) மீட்டுக் (1சாமு: 7:14)
16) இதை (ரூத் 3:13)
17) நம் (1சாமு: 4:3)
22) இல்லம் (ரூத்: 1:16)
24) வடை (ரூத்: 22)
25) சரி (1சாமு: 9:7)
26) இடி (1சாமு: 12:18)
27) கொள் (1சாமு: 10:9)
29) படு (ரூத்: 3:7)


### வலமிருந்து இடம்

2) அரசனான(1சாமு:10:19)
3) இதுவே (1சாமு: 14:10)
5) தாகோன் (1சாமு: 5:4)
7) ஏலி (1சாமு: 1:12)
9) அவளை ரூத்:2:15)
15) மீது (1சாமு: 7:10)
19) ஆம் (ரூத்: 4:11)
22) இவள் (ரூத்: 2:5)
25) சவுல் (1சாமு: 13:3)
33) கொடும் (1சாமு: 2:16)

### கீழிருந்து மேல்

7) ஏன் (1சாமு: 2:29)
8) வலிமை (1சாமு: 10:6)
11) மாடி (1சாமு: 9:25)
12) நாளை (1சாமு: 11:10)
14) பொழிவு (1சாமு: 10:1)
16) இனி (1சாமு: 2:3)
20) ரூத்து (ரூத்:3:8)
21) வதைக் (ரூத்:3:2)
24) வழங்க (1சாமு: 8:6)
30) அச்சம் (1சாமு: 11:7)
31) யார் (ரூத்:2:5)

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 87



**1}** நல்லோர் தீயோர் மேல் கடவுள் என்ன செய்வார்**?**
**2)**விண்ணக தந்தை எப்படிப்பட்டவராக இருக்கிறார்**?**
**3)"**பெயல் செபூலை கொண்டு பேய்களை ஓட்டுகிறான்**"** என்று தனக்கு எதிராக செயற்படுகிறவர்களை பார்த்து இயேசு என்ன கூறினார்**?**
**4)**ஒருவரை விட்டு வெளியேறுகின்ற தீய ஆவி என்ன செய்யும் **?**
**5)**இளைப்பாற இடம் கிடைக்காவிட்டால் தீய ஆவி என்ன செய்யும்**?**
**6)**செக்கரியாவின் மனைவியின் பெயர் என்ன**?**
**7)**செக்கரிவிடம் வானதூதர் உமது மகனிற்கு என்ன பெயரிடும் என்று கூறினார் **?**
**8)**அதிகம் பேறுபெற்றோர் யார் என இயேசு கூறினார்**?**
**9)**அடையாளம் கேட்கும் தீய தலைமுறையினருக்கு யாருடைய அடையாளம் கொடுக்கப்படும் என இயேசு கூறினார்**?**
**10)**ஆண்டவருக்கு குழந்தையை அர்ப்பணிக்க யோசேப்பும்,மரியாவும் எங்கு கொண்டு சென்றார்கள் **?**

# விவிலிய அறிவுப்போட்டி - 81




1. யார் மீது நாம் அன்பு கொள்ளவில்லை அவனது மலை நாட்டைப் பாழாக்கினோம் என்கிறார் ஆண்டவர்?

2. நாம் தலைவன் என்றால் நம் மட்டில் கொண்டிருக்க வேண்டிய அச்சம் எங்கே? என்று சேனைகளின் ஆண்டவர் யாரிடம் கேட்கிறார்?

3. ஆண்டவருக்கு அஞ்சி நடந்தவர்கள் யாரோடு பேசினர்?

4. இதோ அந்த நாள் சூளை போல் எரிந்துகொண்டு வரும். அப்போது யார் யார் அதில் போடப்பட்டு வைக்கோலாவர்?

5. யாரோடு செய்து கொண்ட உடன்படிக்கை நிலைத்திருக்க இந்தக் கட்டளையைக் கொடுத்தோம் என்கிறார் ஆண்டவர்?

6. மக்களினங்கள் நடுவில் எது பெருமை மிக்கது என்கிறார் ஆண்டவர்?

7. கலப்புத் திருமணம் மூலம் எதை வெறுக்கிறோம் என்கிறார் இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர்?

8. ஆண்டவருக்கு எதிராக எதைப் பேசிவிட்டு உமக்கு எதிராக என்ன பேசினோம் என்கின்றனர்?

9. எல்லா மக்கள் முன்னிலையிலும் உங்களை இழிவுக்கு உள்ளாக்குவோம். என்று ஆண்டவர் ஏன் கூறினார்?

10. யாரின் மக்களை தூய்மையாக்கி பொன் வெள்ளியைப் போல் புடம் போடப்பட்டதாகக் கூறப்படுகிறது?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் ~ 80

**ஆகாய் சக்கரியாஸ் ஆகமம்**

1. சேனைனகளின் ஆண்டவனால் 3:9 (சக். ஆகமம்,)
2. தூதுவர் ஆகாய் 1:13 (ஆகாய்,)
3. சாத்தான் 3:2 ( சக் . ஆக)
4. எழுபது ஆண்டுகளாய் 1:12 (சக். ஆக)
5. அத்தோ என்பவரின் மகனான பாக்கியநாதன் மகன் சக்கரியாஸ் இறைவனுருக்கு 1: 7 (சக்கரி ஆகமம்)
6. வடநாட்டிலிருந்து 2:6 (சக்கரி ஆகமம்)
7. சலாத்தியேனின் மகன் சொரொபா பெலுக்கும், யோசதேக்கின் மகன் யோசுவாவுக்கும் 1:1 (ஆகாய்)
8. யூதாவையும், இஸ்ராயேலையும் , யெருசலேமையும் சிதரடித்த கொம்புகள். 1:19 (சக். ஆக)
9. யோசுவாவோ 3:3 (சக். ஆக)
10. திராட்சைக் கொடியின் கீழும், அத்தி மரத்தின்கீழும் 3:10 (சக்.)

## புனித அந்தோனியார் திருவிழா ~ சார்சல் 13~06~2023











# திருக்கெழுத்து புதிர்

## போட்டி இலக்கம் 81

**1 சாமுவேல் (15-31 அதிகாரங்கள்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | | | 3 |
| | ★ | | 4 | 5 | | 6 | ★ | | |
| | | 7 | | | 8 | 9 | | 10 | |
| 11 | | | 12 | | | | 13 | | 14 |
| | 15 | | | | 16 | | | | |
| 17 | 18 | | | 19 | | | | 20 | |
| | 21 | 22 | 23 | | | 24 | 25 | | 26 |
| | | | | 27 | | | 28 | | |
| | | | | | 29 | | | 30 | |
| 31 | | | | 32 | | | | | 33 |

### இடமிருந்து வலம்

1. நீ ............. சொல்ல மாட்டாயா?
2. குகையை ...........த் தம் வழியில் சென்றார்.
5. வாழும் ஆண்டவர் மேல்.............
9. ..............மீட்டுவதில் வல்லவன்.
11. .............மேனியும் ஒளிரும் கண்களும்
12. நம்.............முடிவு செய்து விட்டார்.
16. ...........பாலை நிலத்தில் தங்கியிருந்தார்.
18. ஆண்டவரால் திருப்.............செய்யப்பட்டவர்.
19. .........இஸ்ராயேல் நாட்டு அரசன் தாவீது அன்றோ.
20. உம்மிடம் ஒரு குற்றமும்...........காணவில்லை.
25. .........கேடயமேந்துபவன் முன் செல்ல
27. அரசரை.............அழைக்கும் நீ யார்?
31. சவுல் தாவீதை என்றென்றும் தம் ..........யாக
32. சகோதரர்களைக் காண என்னைப்...............

### வலமிருந்து இடம்

4. எனக்கு ஒரு .......யைக் கட்டளையிட்டுள்ளார்.
13. அதை.........உண்ணும் என்றார்.
21. அவர்........அன்பு கொண்டிருந்தார்.
24. போரிட..........வகுத்தனர்.
26. இதோ உள்ளேன்.........தலைவரே.
29. ஆடுகளின்.........மாடுகளின் இரைச்சலும் என்ன?
32. .......ஸ்தியன் கோலியாத்தின் வாளும் கொடுத்தார்.
33. இருவரின்............ சமமாகவே இருக்கும்.

### மேலிருந்து கீழ்

1. ஆண்டவருக்கு..........ச்சி தருவது எரிபலிகள்.
3. எல்லாரையும்.............அழைத்தார்.
5. அவர்..........களும் அவரைத் தேடிச் சென்றனர்.
7. .............கூழாங் கற்களைத் தேந்தெடுத்து
8. தந்தை சவுல் கூட.............அறிவார்.
9. என் உறவினர் ............?
10. தம் அங்கி, வாள்,......... கச்சை.
12. அவனுக்கு ...........கிடைத்துள்ளது.
13. ..........உன் புதல்வர்களும் என்னோடு இருப்பீர்கள்.
14. ..........சொல்லும் ஒரு பெண்ணைத் தேடி..
19. ஒருத்தி ..........க்கிறாள்.
21. தாவீது யாழ்............க் கொண்டிருந்தாள்.
22. நான்............செய்து விட்டேன்.
23. நான்..........மட்டும் என் தந்தையும் தாயும்
24. தீய ஆவியும் அவரை விட்டு............
28. ..........ஈட்டியோ வாளோ உன்னிடம் உள்ளதா?
29. ..........தெள்ளுப் பூச்சியை தேடி வந்துள்ளார்.

### கீழிருந்து மேல்

4. தலைவரே..........என்மேல் மட்டும் இருக்கட்டும்
5. தீய...........என்மேல் இறங்கியது.
6. யோனத்தான்..........திரும்பினார்.
10. நீயே என்னைக் கொன்று..........
12. அவன்.........யில் முகங்குப்புற விழுந்தான்.
15. ..........மேலும் குற்றம் சுமத்த வேண்டாம்.
17. ஆண்டவரே என்றென்றும் ..........யாக இருப்பார்.
19. ...........உம் அடியாள்.
20. .............என்பது அவர் பெயர்.
24. மகன் மீது............ கொண்டுள்ளார்.
25. ......... ஈட்டியை எறிந்தார்.
30. அவரும் ..........வாக்குரைத்தார்.
31. ...........என்ற நாட்டிற்கு சென்றார்.
33. .............விட்டு எழுந்துவிட்டார்.

## படித்ததில் பிடித்தது

ஒரு உணவகத்தில் இங்கு அனைத்து உணவுகளும் இலவசம். ஆனால் கொஞ்சம் வாந்தி பேதி வரும் என்று எழுதி வைத்தனர். யாருமே அங்கு உணவு சாப்பிட வரவில்லை.

ஒரு பேருந்தில் இந்த பேருந்து இலவசம். கட்டணமில்லை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்யலாம். ஆனால் பிரேக் பிடிக்காது என்று எழுதி வைத்தனர். யாருமே அந்த பேருந்தில் ஏறவில்லை.

ஒரு மருத்துவமனையில் இங்கு அனைத்து சிகிச்சையும் இலவசம் ஆனால் உயிருக்கு உத்தரவாதமில்லை என்று எழுதி வைத்தனர். ஒருவர்கூட அங்கு சிகிச்சைக்கு வரவில்லை.

ஆனால் “ குடி குடியைக் கெடுக்கும்” “ குடிப்பழக்கம் உடல் நலத்திற்குக் கேடு” என்று எழுதி வைத்துவிட்டு மதுவினை விற்றால் மட்டும், ஒரு நாளைக்கு எத்தனையோ இலட்சத்திற்கு மேல விற்பனையாகிறதாம். இங்கு மட்டும் மனிதர்கள் செல்லக் காரணம்? சிந்திப்போம், ஆரோக்கியமாக வாழ்வோம்.

**குறுக்கெழுத்து போட்டியின் விடைகளை தயவு செய்து 05-09-2023 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி**

## இறைவார்த்தை

ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக! ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். அன்பில்லாதோர் கடவுளை அறிந்துகொள்ளவில்லை, ஏனெனில், கடவுள் அன்பாய் இருக்கிறார்.

# பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**02-09-2023 சனி 9 :30**
**03-09-2023 ஞாயிறு 9 :30 திருமணஅருட்சாதன வகுப்பு, பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்.**
**இருஅமர்விலும் முக்கியம் கலந்து சொள்ளவும்**

**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.



**வளர்ந்தோருக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

ஆடி: புதன் 26ந் திகதி - 17:30-18:30
ஆடி: சனி 29ந் திகதி - 17:30-18:30
புரட்டாதி: புதன் 27ந் திகதி - 17:30-18:30
புரட்டாதி: சனி 30ந் திகதி - 17:30-18:30

**சிறுவர்களுக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

ஆடி: புதன் 26ந் திகதி - 18:30 - 20:00
ஆடி: சனி 29ந் திகதி - 18:30 - 20:00
புரட்டாதி: புதன் 27ந் திகதி - 18:30 - 20:00
புரட்டாதி: சனி 30ந் திகதி - 18:30 - 20:00

இவ் வகுப்புக்கு ஞானப் பெற்றோரின் வருகையும் முக்கியம்

**பெல்வில் ஆலயத்தில் நடைபெறும்**

## விவிலிய பொது அறிவுப்போட்டி 80 பரிசு பெறுபவர்கள்

ஆகாஸ் ~ சக்கரியாஸ் ஆகமம்

1) திருமதி: மேரி ஜொய்சி
2) திருமதி: நீற்றா செல்வரட்ணம்

ஏனையவர்கள்:

1) திருமதி: யேம்ஸ் மரிய நீற்றா
2) திருமதி: மரிய செல்வநாயகம்
3) திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர்
4) செல்வி: சியாமளா யோசவ்
5) திருமதி: கெலனா யோசவ்
6) திருமதி: சிறோமா டிலானி
7) திருமதி மேரி பீல்டா யோண்சன்
8) திருமதி: அன்ரன் ரஞ்சிதம்
9) திருமதி: வில்பிறேட் ஜெஸ்மி மெற்றில்டா
10) திருமதி: லோறன்ஸ் அந்தோனி
11) திருமதி: யேசுதாசன் வேர்ஜினியா

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்


## ஆடி - பணியகத் திருப்பலிகள்

**02- 07-2023 புனிதர்கள் பேதுரு–பவுல் திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

**23- 07-2023 புனித அன்னம்மாள் திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**30-07-2023 - புனித யாகப்பர் திருவிழா**
15:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

## ஆவணி - பணியகத் திருப்பலிகள்




**தூய கன்னிமரியாளின் விண்ணேற்புப் பெருவிழா - வயல் மாதா 15-08-2023**
10:00 - Notre Dame de France
95560 - Baillet en France



**தூய கன்னிமரியாளின் விண்ணேற்புப் பெருவிழா 15-08-2023**
15:30 Eglise St. Joseph des Nations -75011-Paris

## புரட்டாதி - பணியகத் திருப்பலிகள்

**02- 09-2023 புனித குழந்தைதெரேசம்மாள்திருவிழா**
17 :00 Chapelle ND de Lourdes République

**03- 09-2023 புனித அடைக்கலமாதா திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations -75011-Paris

**10- 09-2023 புனித கன்னிமரியாளின் பிறப்புதிருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**17- 09-2023 அதிதூதர் தூய மிக்கேல் திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**17- 09-2023 அன்னை வேளாங்கன்னி திருவிழா**
**Sevran -பணித்தளம்**
17:00 - Eglise St Martin – Sevran

**24- 09-2023 மருதமடு அன்னை திருவிழா**
14:30 - Chapelle Notre Dame des Ange - Clichy



# இரத்ததானம் செய்த இளையோர்கள் ~ 2023




## 14-05-2023 ல் நடைபெற்ற பாத்திமா அன்னை திருவிழா



Neuily sur marne



